இதழ்-95

01.05.2026

# தூமி

பல்சுவை மின்னிதழ்




பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thu-

ஆசிரியர்
ச.சந்தோஷன்

இணை ஆசிரியர்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

செய்தியியலாளர்
ச.மதுஷா

வடிவமைப்பாளர்
ர.அபிரா
வ. குணநீதன்

திறனாய்வாளர்
கு.கீர்த்தனன்


# இவ்விதழில் துமித்தவை....


03 வருங்காலத் தலைமுறைக்கு ஒரு வறண்ட பூமியையா பரிசளிக்க போகிறோம்?

06 பத்தாண்டுகளை நிறைவு செய்துள்ளது துமி அமையம்

08 புத்தரின் சித்தாந்தம் மதத்தையா மாற்றத்தையா போதித்தது?

16 உழைப்பின் பெருமை பேசும் தொழிலாளர் தினம்

19 பக்தி பூர்வமாக நடைபெற்ற நல்லை குரு முதல்வர் குருபூசை தினம்

21 தோல்வி வெற்றியின் முதல் படி

26 புலன் கடந்த புலக்காட்சியில் தொலையுணர்வு(Telepathy)

35 'அவரோட குணம் அப்படித்தான்' என்று சொல்லிவிடலாமா?

38 பெண்களின் முன்னேற்றம்: சவால்களும் சாதனைகளும்

41 இருபதாம் நூற்றாண்டில் கிரிக்கெட் கண்ட வளர்ச்சி




தொழிலாளர் தின வாழ்த்துகள்

ஆசிரியர் பதிவு

# வருங்காலத் தலைமுறைக்கு ஒரு வறண்ட பூமியையா பரிசளிக்க போகிறோம்?

இலங்கையின் தற்போதைய வானிலை ஒரு சாதாரண பருவகால மாற்றமாகத் தெரிந்தாலும், அதன் பின்னணியில் ஒரு மாபெரும் இயற்கைச் சீற்றம் மெல்லத் தலைதூக்கி வருவதை ஆய்வாளர்கள் ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டியுள்ளனர். குறிப்பாக பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா அவர்கள் இவ்விடயம் தொடர்பாக மக்களை தொடர்ச்சியாக விழிப்பூட்டிய வண்ணம் உள்ளார். அந்த விழிப்புணர்வு பதிவுகளை மீள வலியுறுத்துவதே துமியின் ஆசிரியர் பதிவின் நோக்கம்.

சூரியனின் நேரான கதிர்வீச்சு ஏப்ரல் இறுதிவரை நீடிக்கப்போகும் அதேவேளை, வளிமண்டலத்தின் சாரீரப்பதன் என்பது சதவீதத்திற்கும் அதிகமாக நிலவுகின்றது.



இது வெறும் வெக்கையை மட்டும் தராமல், மனித உயிருக்கும் விவசாயத்திற்கும் அவசியமான நீரை மிகவேகமாக வளிமண்டலத்திற்குள் உறிஞ்சி எடுத்து வருகின்றது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் அண்மைய நாட்களில் பதிவாகி வரும் ஆவியாக்க அளவுகள் நம்மை அதிரச் செய்கின்றன. ஒரு நாளைக்கு நாற்பது மில்லிமீட்டருக்கும் அதிகமான நீர் ஆவியாவதென்பது, நமது தரைமேற்பரப்பு மற்றும் தரைக்கீழ் நீர்மட்டங்கள் சடுதியாகக் குறைவதற்கான மிகமுக்கிய அறிகுறியாகும். அவ்வப்போது பெய்யும் வெப்பச்சலன மழையானது இந்த இழப்பை ஈடுசெய்யப் போதுமானதாக இல்லை என்பதே கசப்பான உண்மை.

வரப்போகும் நாட்களில் நாம் எதிர்கொள்ளவிருக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தல் ‘சூப்பர் எல்நினோ’ ஆகும். மே மாதம் முதல் ஆரம்பித்து 2027ஆம் ஆண்டு இறுதிவரை நீடிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படும் இந்தத் தோற்றப்பாடு, சமுத்திர வெப்பநிலையை வழமைக்கு மாறாக மூன்று முதல் ஐந்து பாகை செல்சியஸ் வரை அதிகரிக்கச் செய்யும் வல்லமை கொண்டது. ஐரோப்பிய வானிலை மாதிரிகளின் இந்த எதிர்வு கூறல்கள் உண்மையாகும் பட்சத்தில், இலங்கை வரலாறு காணாத வறட்சியைச் சந்திக்க நேரிடும். எல்நினோவின் தாக்கம் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழைகளின் இயல்பு நிலையைச் சிதைக்கக் கூடியது. சில நேரங்களில் இது எதிர்பாராத பெருவெள்ளத்தை ஏற்படுத்தினாலும், ஒட்டுமொத்தமாக நீர் பற்றாக்குறையையே ஒரு நிரந்தரச் சவாலாக மாற்றப்போகின்றது.

இயற்கையின் இந்த எச்சரிக்கைகளுக்கு மத்தியிலும் நமது அன்றாட நீர் பயன்பாட்டு முறைமை மிகுந்த கவலையளிப்பதாகவே உள்ளது. வானிலை ஆய்வாளர்கள் பகல் பொழுதில் நீர் பயன்படுத்துவதைத் தவிர்க்கக் கோரிக்கை விடுத்தும், நடைமுறை யதார்த்தம் வேறாக உள்ளது. சுட்டெரிக்கும் மதிய வேளையில் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதும், வீதிகளில் தூசி கிளம்பாமல் இருக்க அதிகப்படியான நீரைத் தெளிப்பதும், கிணறுகளை இறைத்துச் சுத்தப்படுத்துவதும் நமது நீர் இருப்பைத் தற்கொலைக்குச் சமமான நிலைக்குத் தள்ளி வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகளின்



போது நாம் பயன்படுத்தும் நீரை விட, ஆவியாகி வீணாகும் நீரின் அளவு மிக அதிகம் என்பதை மக்கள் உணராதது பெரும் பலவீனம். கோடை காலம் மார்ச் முதல் செப்டம்பர் வரை நீண்டிருப்பதாலும், அதன் உச்சகட்டம் ஜூலை மாதத்திலேயே ஏற்படப்போவதாலும், இன்று நம்மிடம் இருக்கும் சிறு அளவு நீரையே எதிர்வரும் அக்டோபர் மாதம் வரை மிகக் கவனமாகப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். தற்போது நிலவும் கடும் வெப்பநிலை, அதிகரித்து வரும் ஆவியாக்கம், மே மாதம் உருவாகவுள்ள சூப்பர் எல்நினோ மற்றும் நிச்சயமற்ற பருவமழை ஆகிய நான்கு காரணிகளும் இணைந்து ஒரு மாபெரும் நீர் நெருக்கடியை நம் முன்னே நிறுத்தியுள்ளன

இந்த இக்கட்டான சூழலில், அரசாங்கமும் பொதுமக்களும் கைகோர்த்துச் செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். நீர் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது என்பது இனி ஒரு தெரிவு அல்ல, அது நமது வாழ்வாதாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஒரே வழி. விழிப்புணர்வு என்பது வெறும் அறிக்கைகளோடு நின்றுவிடாமல், ஒவ்வொரு தனிமனிதனும் பகல் நேர நீர் பயன்பாட்டைக் குறைத்து, சேமிப்பைத் தன் கடமையாகக் கொள்ள வேண்டும்.

இல்லையேல், வருங்காலத் தலைமுறைக்கு ஒரு வறண்ட தேசத்தையும், தீராத தாகத்தையும் மட்டுமே விட்டுச் செல்லும் வரலாற்றுப் பிழையை நாம் செய்தவர்களாகிவிடுவோம். இயற்கையின் மாற்றங்களை உணர்ந்து, காலத்தே செயல்பட வேண்டிய தருணம் இதுவே.



# பத்தாண்டுகளை நிறைவு செய்துள்ளது துமி அமையம்

துமி அமையம் தனது மகத்தான சமூகப் பயணத்தில் பத்து ஆண்டுகளை வெற்றிகரமாகக் கடந்து, ஒரு தசாப்த கால சாதனையைத் தடம் பதித்துள்ளது. இறைவன் திருவருளாலும், நற்புள்ளங்களின் ஒத்துழைப்பாலும் இந்தப் பத்தாண்டு காலப் பயணம் அர்த்தமுள்ளதாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும் அமைந்திருக்கிறது. ஒரு சிறு துமியாக ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு, பெரு வெள்ளத்திற்கான தனது பயணத்தில் இன்று முக்கிய நிலையை அடைந்திருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த நீண்ட நெடிய பயணத்தில் எம்மோடு தோளோடு தோள் நின்று, ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எமது முயற்சிகளுக்கு வலுசேர்த்த அனைத்து உறவுகளுக்கும், நண்பர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும், நலிந்த பிரிவினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் எம்மால் இயன்ற பணிகளைச் செய்யக் கிடைத்த வாய்ப்பை மிகப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறோம். இத்தகைய நற்பணிகளைத் தங்குதடையின்றி முன்னெடுப்பதற்குத் தேவையான மனவலிமையையும், சந்தர்ப்பங்களையும் வழங்கிய எல்லாம் வல்ல இறைவனுக்கு எமது கோடான கோடி நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

எமது கடந்த காலச் செயல்பாடுகள் ஒவ்வொன்றும் சமூகத்தில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இந்த நம்பிக்கையே எங்களை அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்த்திச் செல்கிறது. கடந்த கால அனுபவங்கள் கற்றுத்தந்த பாடங்களைக் கொண்டு, எதிர்வரும் காலங்களிலும் துமி அமையம் இன்னும் வீரியத்துடன் செயல்படத் திட்டமிட்டுள்ளது. இந்தப் பயணம் மென்மேலும் வெற்றி பெறவும், இன்னும் பலருக்கு எமது சேவைகள் சென்றடையவும் இறைவனின் பேரருளை வேண்டி நிற்கின்றோம். அதேவேளையில், எமது முன்னோடிகள் மற்றும் பெரியவர்களின் வழிகாட்டல்களும், ஆசிகளும் எமக்கு என்றும் பாதுகாப்பு அரணாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. சமூகத்தின் மீதான அக்கறையும், அர்ப்பணிப்பும் மிக்க இந்த உன்னதப் பயணம் இன்னும் பல தசாப்தங்களைக் கடந்து நிலைபெறவும், வளமானதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பவும் உங்கள் அனைவரதும் ஆதரவையும் ஆசிகளையும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

துமி அமையம் தனது மகத்தான சமூகப் பயணத்தில் பத்து ஆண்டுகளை வெற்றிகரமாகக் கடந்து, ஒரு தசாப்த கால சாதனையைத் தடம் பதித்துள்ளது. இறைவன் திருவருளாலும், நற்புள்ளங்களின் ஒத்துழைப்பாலும் இந்தப் பத்தாண்டு காலப் பயணம் அர்த்தமுள்ளதாகவும், ஆக்கப்பூர்வமானதாகவும் அமைந்திருக்கிறது. ஒரு சிறு துமியாக ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு, பெரு வெள்ளத்திற்கான தனது பயணத்தில் இன்று முக்கிய நிலையை அடைந்திருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த நீண்ட நெடிய பயணத்தில் எம்மோடு தோளோடு தோள் நின்று, ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எமது முயற்சிகளுக்கு வலுசேர்த்த அனைத்து உறவுகளுக்கும், நண்பர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும், நலிந்த பிரிவினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் எம்மால் இயன்ற பணிகளைச் செய்யக் கிடைத்த வாய்ப்பை மிகப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறோம். இத்தகைய நற்பணிகளைத் தங்குதடையின்றி முன்னெடுப்பதற்குத் தேவையான மனவலிமையையும், சந்தர்ப்பங்களையும் வழங்கிய எல்லாம் வல்ல இறைவனுக்கு எமது கோடான கோடி நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

எமது கடந்த காலச் செயல்பாடுகள் ஒவ்வொன்றும் சமூகத்தில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இந்த நம்பிக்கையே எங்களை அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்த்திச் செல்கிறது. கடந்த கால அனுபவங்கள் கற்றுத்தந்த பாடங்களைக் கொண்டு, எதிர்வரும் காலங்களிலும் துமி அமையம் இன்னும் வீரியத்துடன் செயல்படத் திட்டமிட்டுள்ளது. இந்தப் பயணம் மென்மேலும் வெற்றி பெறவும், இன்னும் பலருக்கு எமது சேவைகள் சென்றடையவும் இறைவனின் பேரருளை வேண்டி நிற்கின்றோம். அதேவேளையில், எமது முன்னோடிகள் மற்றும் பெரியவர்களின் வழிகாட்டல்களும், ஆசிகளும் எமக்கு என்றும் பாதுகாப்பு அரணாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. சமூகத்தின் மீதான அக்கறையும், அர்ப்பணிப்பும் மிக்க இந்த உன்னதப் பயணம் இன்னும் பல தசாப்தங்களைக் கடந்து நிலைபெறவும், வளமானதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பவும் உங்கள் அனைவரதும் ஆதரவையும் ஆசிகளையும் என்றும் எதிர்பார்க்கின்றோம்...




“முதலில் தோன்றியது மனிதனா? கடவுளா? ”

“முதன்முதலில் மனிதன் கடவுளைப் படைத்து, பின்பு கடவுள் மனிதனைப் படைத்தார்“ என்றார் அமெரிக்கத் தத்துவமேதை பேராசிரியர் லூயிபெல். மற்றொரு புறம், ஆண்ட்ரே மால்ராக்ஸ் எனும் பிரெஞ்சுத் தத்துவ அறிஞர், “கடவுள் என்ற கருத்துருவாக்கம் இல்லாதிருந்திருந்தாலும் ஏதாவதொரு வழியில் மனிதன் ஒன்றை உண்டாக்கி இருப்பான். ஏனென்றால், அவனது மனதிற்கு அது மிகவும் இன்றியமையாத ஒன்று“ என்று கூறுகின்றார். நமது உள்ளார்ந்த அச்சம், கவலைகள், தொல்லைகள், பதற்றம் ஆகியவற்றைத் அடக்கிவைக்க ஒரு தெய்வீக சக்தி தேவைப்படுகிறது. பிரச்சினைகளைத் தவிர்த்து, நமக்கு ஆறுதல் தர நாம் ஒரு ஒளிவட்டத்தை சார்ந்திருக்கிறோம்.

சமயம் தோன்றியது ஏன்? மனிதனின் அச்சம், ஐயப்பாடு, பாதுகாப்பின்மை இவற்றில் தான் சமயத்தின் பிறப்பிடம் உள்ளதா?

சமயங்கள் தோன்றுவதற்கு முற்பட்ட நாட்களில், மக்களுக்கு இந்த வாழ்க்கையின் உண்மையான இயல்பையும், மரணத்திற்குப் பின் அவர்களுக்கு என்ன நடக்குமென்பதையும் அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இயற்கையின் தோற்றங்களுக்கும் சீற்றங்களுக்கும் உள்ள காரணங்களை அறிய முடியாமல் இருந்தனர்.

இந்த மகிழ்ச்சியானதும், மகிழ்ச்சியற்றதுமான அனைத்தையும் உண்டாக்க, புலப்படாத சில காரணங்கள் இருக்க வேண்டுமென்று அவர்கள் சந்தேகித்தனர். இறுதியாக இயற்கையின் இந்த வலிமைகளுக்குப் பின்னால் ஒரு ஆற்றல் இருக்கிறது என்பதை உணரத் தலைப்பட்டனர். அவர்கள் அந்த ஆற்றலை “சக்தி” என்றழைத்தனர்.

இவ்வாற்றல்கள் தங்களுக்கு எவ்வகையிலாவது தீங்கிழைக்கக்கூடும் என்றுணர்ந்த அவர்கள், அவற்றின் பேரில் விளக்க முடியாத ஒரு வியப்பும், அச்சமும் கொண்டனர். எனவே, தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அந்த சக்திகளை அவசியம் அமைதிப்படுத்திப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென உணர்ந்தனர்.

இந்தச் சக்திகளுடன் சாதாரண மொழியில் பேசுவதை விட, அவர்கள் தங்கள் விடயங்களை சைகைகள் மூலம் தெரிவிப்பதே பயன் தருவதாக இருக்கும் என்று கருதினர். இறுதியாக இச் சக்திகளின் சகாயத்தைப் பெறுவதற்காக மேற்கொண்ட இந்த நடவடிக்கைகள் வழிபாடுகளாகவும் சடங்குகளாகவும் மாறின.

கற்பனையும், மனிதாபிமானமும் ஒன்று சேர்ந்து பிணைந்து சமயம் உண்டானது இப்படித்தான் என்கிறது ஒரு வாதம்.

இத்தகையதொரு சூழ்நிலையில் தான் ஒரு மாற்றம் உருவானது. 2600 ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியாவின் கபிலவஸ்துவில் வாழ்ந்த ஒரு இளவரசர் ‘சித்தார்த்தர்’ இவ்வுலகில் உயிர்கள் ஏன் துன்பப்படுகின்றன என்பது பற்றி மிக ஆழமாகச் சிந்திக்கத் தலைப்பட்டார். இந்தத் துன்பத்தின் காரணம் என்ன? என்று கேள்வி எழுப்பினார். ஒரு நாள், ஒரு இளஞ் சிறுவனாக ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்த போது, திடீரெனத் தென்பட்ட ஒரு பாம்பு ஒரு தவளையைப் பிடித்ததை அவர் கண்டார். பாம்பும், தவளையும் போராடிக் கொண்டிருந்த போது, விண்ணிலிருந்து ஒரு பருந்து பாய்ந்து வந்து, பாம்பின் வாயில் தவளை இருந்தபடியே, அந்தப் பாம்பைத் தூக்கிச் சென்றது. இந்த நிகழ்ச்சி அந்த இளவரசருடைய உலகியல் வாழ்வைத் திருப்புவதற்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. நீரிலும், நிலத்திலும் வாழும் உயிர்கள் எப்படி ஒன்றையொன்று கொன்று உயிர் வாழ்கின்றன என்பது பற்றி அவர் சிந்தித்தார்.

ஓர் உயிரினம் பிடிக்கப் பார்க்கிறது மற்றொன்று தப்ப முயல்கிறது. உலகம் உள்ளவரை இந்த முடிவற்ற போர் தொடரும்.

இந்த முடிவில்லாத வேட்டையும், தற்காப்புத் தவிப்புமே நம் மகிழ்ச்சியின்மையின் அடிப்படை. இதுவே எல்லாத் துன்பங்களுக்கும் பிறப்பிடம். இந்தத் துன்பத்திற்கு முடிவு காண்பதற்கான வழியைத் தான் கண்டறிய வேண்டுமென அந்த இளவரசர் அன்று தீர்மானித்தார்.

பல்வேறு சமய ஆசிரியர்களிடம் பயின்றார். எனினும், துன்பத்திற்கு முடிவுக்கட்டும் வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்தக் கேள்வியைச் சிந்தித்தவாறே பல ஆண்டுகளைக் கழித்தார். இறுதியாக இருபத்தொன்பது வயதில் பிணி, மூப்பு, சாக்காடு, துறவுவழி மற்றும் வீடுபேறு ஆகியன பற்றி தீவிரமாகச் சிந்தித்த அவர் தமது உலகியல் ஈடுபாடுகளையும், பொறுப்புகளையும், சுகபோகங்களையும் விட்டொழித்தாலன்றி விடை காண்பது இயலாதென்று முடிவுசெய்தார். இதன் காரணமாகவே அவர் துறவு கொண்டு அரண்மனையை விட்டகன்றார்.

ஆறாண்டு காலப் போராட்டத்திற்குப் பிறகு அவர் இறுதியாக தன் சுய முயற்சியாலே மெய்யொளிப்பேறு எய்தினார். நம்முடைய துக்கத்தின் காரணத்தைப் புரிந்து கொண்டார். அவரே தான் பிற்காலத்தில் “புத்தர்“ - அதாவது “விழிப்பு அடைந்தவர்“ என்று மக்களால் அழைக்கப்பட்டார். இதுவே பௌத்தம் என்கிற மற்றொரு “சமய அமைப்புமுறை“யின் துவக்கமானது. உண்மையில் இன்று பல பேர் பௌத்தத்தை ஒரு சமயம் என்று கூட அழைக்க விரும்புவதில்லை ஏனெனில், “சமயம்“ என்ற சொல் அவர்கள் மனதில் ஏராளமான எதிர்மறை மனவெழுச்சிகளை உருவாக்கி விடுகிறது.

இதனை இன்னொரு மதமாக அறிமுகம் செய்வதற்கான எண்ணமும் புத்தருக்கு அப்போது இருக்கவில்லை. ஏனென்றால் 2600 ஆண்டுகளுக்கு முந்திய அந்த காலகட்டத்தில் இந்தியாவில் மட்டுமே எத்தனையோ சமய முறைகள் ஏற்கனவே இருந்துவந்தன. அவரது காலத்து சமயங்களால் அவரது வினாக்களுக்கு விடையளிக்க இயலாது போய்விட்டதால் அவர் தாமே சிந்தித்து உணர்ந்தவற்றை அறிமுகம் செய்துவைக்க அந்தச் சமயங்களின் கோட்பாடுகளையோ, கருத்துருக்களையோ பயன்படுத்தபோவதில்லை என்று முடிவு செய்தார்.



அந்தக் காலத்து இந்தியாவின் சமயச் சிந்தனை என்னவாக இருந்தது?“கடவுள் ஒவ்வொருவரையும் உண்டாக்குகிறார். கடவுளே எல்லாவற்றுக்கும் பொறுப்பு கடவுள் வரம் தருவார். கடவுள் நம் பாவங்களை எல்லாம் மன்னிப்பார் கடவுளே நம் மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கைக்குப் பொறுப்பு கடவுள் நம்மை சொர்க்கத்துக்கோ, நரகத்துக்கோ அனுப்பி வைப்பார்’

புத்தர் தம்மைப் பின்பற்றுவோர் என்று கூறிக்கொண்டவர்களுக்கு சொர்க்க சுகமோ, வெகுமதியோ கிடைக்குமென்று வாக்குறுதியளிக்கவில்லை. அன்றி தம் பேரில் நம்பிக்கை வைத்தவர்களுக்குக் கடைத்தேற்றம் கிடைக்குமென்றும் வாக்குறுதி தரவில்லை. அவரைப் பொறுத்தவரை சமயம் என்பது வியாபாரம் பேசுவதல்ல் அது மெய்யொளிப் பேற்றையும் கடைத்தேற்றத்தையும் அடைவதற்கான ஒரு மேன்மைவாய்ந்த அரிய வாழ்க்கை நெறி. மக்கள் சிந்தித்துப் பார்த்து விளங்கி கொள்வதையே அவர் விரும்பினார். மனித நேயமும், நீதியும், அமைதியும் பேரரசு புரியுமொரு மேன்மைவாய்ந்த அரிய வாழ்க்கை நெறியே பௌத்தம் என்று சொன்னார்.

ஆனால், புத்தர் தமது கோட்பாட்டை அறிமுகம் செய்ய அன்றைய இந்தியாவில் புழக்கத்தில் இருந்துவந்த சமயக் கலைச் சொற்களையே பயன்படுத்தினார். ஏனென்றால், அப்படிச் செய்தால்தான் தம் பேச்சைச் செவிமடுப்பவர்களோடு பழக்கப்பட்ட தளத்தில் அவரால் உரையாட முடியும் என்று நம்பினார்.

தர்மம், கர்மா, நிர்வாணம், மோட்சம், நரகம், சம்சாரம், ஆத்மா என்பன அவரது காலத்தில் எல்லாச் சமயப் பிரிவினருக்கும் பொதுவாக இருந்துவந்த சில சொற்களாகும். அவ்வாறே புத்தர் தமது போதனையில் பழக்கத்திலிருந்த இந்தச் சமயச் சொற்களுக்கு பகுத்தறிவுக்கு உகந்ததாகவும், தனிச்சிறப்பு வாய்ந்ததாகவும் உள்ள பொருள்களை வழங்கலானார்.

எடுத்துக்காட்டாக தர்மம் (அல்லது தம்மம்) என்ற சொல்லைப் பார்த்தால், "தர்மம்” எனும் இந்தச் சொல்லுக்கு தொல்பழங்காலத்தில் வழங்கி வந்த பொருள் ‘கடவுளால் வழங்கப்பட்ட ஒரு விதி’ என்பதாகும்.

தொன்மையானதொரு நம்பிக்கைக்கு இணங்க, இந்த தர்மத்தைக் காப்பதற்காக அவ்வப்போது பல்வேறு அவதாரங்களை எடுத்து காட்சியளிப்பதாகக் கடவுள் வாக்குறுதி அளித்துள்ளார். புத்தர் தர்மம் எனும் சொல்லைத் தம்முடைய போதனை முழுமையையும் வருணிக்கப் பயன்படுத்தியுள்ளார். எது தாங்குகிறதோ, எது ஆதரிக்கிறதோ அதுவே தர்மம்.

உயிர் வாழ்ந்திருப்பதால் உண்டாகும் துன்பத்திலிருந்து நாம் தப்பவும், நம் மேன்மையின் தரத்தைக் கெடுத்து கீழ்நிலைகளுக்குத் தாழ்ந்து சென்றுவிடாமல் தடுக்கவுமே புத்தர் தர்மத்தைப் போதித்தார். புத்தர் அறிமுகப்படுத்திய தர்மம் நம்மைத் தாங்கி ஆதரித்து இந்த உலகங்களின் துயரங்களிலிருந்து நம்மை விடுவிக்கிறது.

பொதுவாக சமயத்தைப் பற்றி மக்கள் பேசிக் கொள்ளும் போது 'உங்கள் நம்பிக்கை (faith) என்ன?' என்று கேட்பது வழக்கமாக உள்ளது. ஆனால் 'நம்பிக்கையை' வளர்க்க புத்தர் ஆர்வம் கொள்ளவே இல்லை. பகுப்பாய்வினால் விளைந்த அறிவு இல்லாமல் நம்பிக்கையை மட்டும் சார்ந்திருப்பதில் உள்ள ஆபத்து என்னவென்றால் அது நம்மைச் சமய வெறியர்களாக்கிவிடக்கூடும் என்பதே. தங்கள் மனதில் நம்பிக்கையை உறுதிபட அனுமதிப்பவர்களால் பிறருடைய கண்ணோட்டத்தை உணர முடியாது. புத்தர் தம் சொந்தப் போதனைகளைக் கூட நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று வற்புறுத்தினார். ஒருவர் அறிவைப் பெறவேண்டும் அதன்பின் ஆய்வு, விவாதம், தியானம் மற்றும் இறுதியாக ஈடுபாடு ஆகியவற்றின் மூலமாக விளக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். செய்திகள் பற்றிய அறிவு என்பது ஒன்று விளக்கம் என்பது வேறொன்று. விளக்கம் இருந்தால் ஒருவர் தமக்குள் தாமே தெளிவு பெற முடியும் என்றார்.

'என்ன செய்ய வேண்டுமென்று புத்தரால் உனக்குச் சொல்ல முடியும் ஆனால், அந்த வேலையை உனக்காக அவரால் செய்ய முடியாது' என்பது ஒரு கூற்று. கடைத்தேற்றுவதற்கான வேலையை நீயே செய்து கொள்ள வேண்டும். கடைத்தேற்றுவதற்காக வழிகாட்டுவதைத் தவிர யாரும் மற்றொருவருக்கு வேறெதுவும் செய்துவிட முடியாது என்று புத்தர் தெளிவாகவே கூறியுள்ளார். ஆகவே, நாம் கடவுளை நம்பி இருக்கக்கூடாது அதோடு புத்தரையும் கூட நம்பி இருக்கக் கூடாது. ஒரு மனிதராக இருப்பதில் உள்ள தன்மைகளையும், கடமைகளையும், பொறுப்புக்களையும் நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

புத்தரின் போதனை முறை மற்றவர்களின் முறையிலிருந்து மாறுபட்டது. அவர் ஒரு போதும் தயாரித்து வைத்துக் கொண்டு பொதுமக்கள் முன் பேசியதில்லை, சொற்பொழிவாற்றியதுமில்லை. அவர் எப்பொழுதும் அந்த அந்த நேரத்து உடனடி நிகழ்வு, அல்லது உற்றுநோக்கிய சம்பவம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டே தம் பேச்சின் பொருளைத் தீர்மானித்தார்.

புத்தரின் போதனாவிலாசத்தையும், ஓர் ஆசிரியர் என்ற முறையிலான அவரது திறமையையும் காட்டும் கதைகள் பல. 'எடுத்துக்காட்டாக, ஒரு ஆற்றங்கரை ஓரமாக ஒரு சமயம் அவரும் அவரது மாணாக்கர்களும் நடந்து சென்று கொண்டிருந்த போது, ஒரு மரத் துண்டு ஆற்றோட்டத்தில் மிதந்து செல்வதைக் கவனித்தார். நின்று தம் மாணாக்கர்களைக் கேட்டார், 'இந்த மரத்துண்டைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அதற்கு என்ன நேரும்?'

ஒரு மாணவர் பதிலளித்தார். 'ஆற்றின் நடுவே உள்ள ஒரு தீவில் அது கரை சேரலாம்.' மற்றவர்கள், 'அது நீரில் நன்றாக ஊறி மூழ்கிப் போகலாம்' என்றார்கள்.

'அல்லது அது யாராலாவது எடுத்துச் செல்லப்படலாம்' என வேறு சிலர் கூறினார்கள்.

புத்தர் கேட்டார், 'அப்படி எதுவுமே நடக்காவிட்டால், அந்த மரத்துண்டு எங்கே போய்ச் சேரும்?'.

அவர்கள் சொன்னார்கள், 'அது நேரே கடலில் போய்ச் சேரும்'.

புத்தர் கூறினார்: 'அதைப்போலத்தான் நாமும். நாம் வலது கரையில் (புலன் இன்பங்கள்) சிக்கிக் கொள்ளாமலும், இடது கரையில் (தவறான கொள்கைகள்) கரை ஒதுங்காமலும், நடுவில் அமிழ்ந்து போகாமலும் (சோம்பல்), யாராலும் எடுத்துச் செல்லப்படாமலும் (பிறரது தவறான வழிகாட்டுதல்) இருந்தால், நாமும் நேரே நிர்வாணம் எனும் கடலைச் சென்றடைவோம்'.

'நிர்வாணம் அல்லது மோட்சம் என்பது இறப்பிற்குப் பின் கிடைக்கும் ஒன்றல்ல. அது இப்பொழுதே, இங்கேயே உங்கள் மன அமைதியிலும், தெளிவிலும் உணரப்பட வேண்டிய ஒன்று' என்றார்.

புத்தர் தன்னுடைய கைகளை அசைத்து நம்முடைய பிரச்னைகள் எல்லாவற்றையும் தீர்க்கும் மாயவித்தைக்காரர் அல்ல. மாறாக நம்முடைய வாழ்க்கைப் பிரச்சனைகளில் இருந்து நம்மை நாமே விடுவித்துக்கொண்டு அதனை நாம் பின்பற்றுவதற்கான பாதையை அமைத்து கொடுத்திருக்கிறார். புத்தர் எதையும் எழுதி வைக்கவில்லை. ஆனால் அவர் கற்பித்த போற்றத்தக்க தர்மம் அவர் காண்பித்த சமய வழியைப் பின்பற்றிய சீடர்களால் (சங்கம் என்று அழைக்கப்படுவர்) வழிவழியாக வாய்மொழிச் சொல்லாகப் பரவி உலகில் நிலை பெற்றது. அவர் தம் வாழ்நாளில் 45 ஆண்டுகள் சங்கத்திற்கு வழி காட்டியாக விளங்கினார்.

இச்சங்கம் பல நூற்றாண்டுகளாக அழியாது தொடர்ந்து புத்தரின் ஞானத்தைத் தங்கள் வாழ்க்கை நடைமுறையினாலும் வாய்ச் சொல்லாலும் பாதுகாத்து வருகிறது. இது நாள் வரை புத்தர், தர்மம், சங்கம் ஆகிய மூன்றும் எல்லாப் பௌத்த மதத்தினராலும் “மூன்று புகலிடங்கள்“ என்று மதித்துப் பாராட்டப் படுகின்றன.

புத்தர் காலத்திற்குப் பிறகு அவர் கற்றுக்கொடுத்த தர்மம் ஆசியாக் கண்டம் முழுவதும் அதற்கு அப்பாலும் பரவியது. அதனால் அந்தந்த நாடுகளின் கலாச்சாரங்கள் ஏற்படுத்திய தாக்கத்தினால் அது பல மாறுபாடுகளையும் அடைந்தது. அதன் விளைவாகப் பௌத்த மதத்திற்குள்ளேயே பல உட்பிரிவுகள் தோன்றின. அவற்றுள் முக்கியமான மூன்று பிரிவுகளாவன : தேராவாதம் (பெரியோர் வாதம்) என்று அழைக்கப்படும் பிரிவு இலங்கை, தாய்லாந்து, பர்மா நாடுகளில் இன்றும் பரவலாகக் காணப்படுகிறது. மஹாயானாம் (பெரிய வாகனம்) என்று அழைக்கப்படும் பிரிவு சீனா, கொரியா, ஜப்பான் நாடுகளில் காணப்படுகின்ற பழக்க வழக்கங்களைத் தழுவியது. வஜ்ரயானாம் (வைரக்கல் வாகனம்) என்று அழைக்கப்படும் பிரிவு திபெத் பகுதியில் காணப்படுகிறது.

ஒருமுறை புத்தரிடம் எதனால் அவர் சீடர்கள் எப்போதும் உற்சாகமாக இருக்கிறார்கள் என்று கேட்டதற்குப் அவரது பதில்: ”அவர்கள் கடந்து போனதை நினைத்துக் கவலை அடைவதில்லை வரப்போவதை நினைத்து எண்ணி எண்ணி ஏங்குவதில்லை அவர்கள் நிகழ்காலத்தில் வாழ்கிறார்கள்அதனால் பிரகாசமாக இருக்கிறார்கள்.”இந்த வழியை முழுமையாகப் பேணிவளர்த்தவர்கள் துன்பம் நேரும் போதும் உள்ளத்தில் அமைதியையும் பொறுமையையும் காண்கிறார்கள்.

காலம் கனிந்து வரும்போது தங்கள் செல்வங்களைப் பிறருடன் பகிர்ந்துக்கொள்ள ஆசைப் படுகிறார்கள். குறையற்ற வாழ்வும், வன்முறையற்ற மனோபாவங்களுடனும் வாழ்வதனால், எந்தச் சூழ்நிலையிலும் தம் சீடர்களது உள்ளம் நிலையாகவும் உற்சாகமாகவும் இருக்கிறது என்றார்.

கடவுள் மறுப்புக் கொள்கையிலிருந்தே பௌத்தம் தொடங்கியது. ஆடம்பரங்களையும், அரசுடமைகளையும் விட்டு நீங்கியே அரசமரம் அடைந்தார் புத்தர். அரசமரத்தின் அடியில் புத்தராக இருப்பது ஆச்சரியமல்ல, போர்க்களத்திலும் புத்தர் புத்தராக இருக்க முடியுமா? அசோக மன்னன் தொட்டு வரலாற்றில் எத்தனையோ போர்க்களங்களில் பூக்களை பூக்கச்செய்தவை புத்தரின் போதனைகள். அந்தப் போதனைகள் வெறும் துறவறக் கருத்துகள் அல்ல் மனித மனத்தின் ஆழத்தில் வேரூன்றிய கருணை, அஹிம்சை, சமத்துவம் ஆகியவற்றின் உயிரோட்டம். இரத்தம் சிந்திய நிலங்களை கூட அமைதியின் வயல்களாக மாற்றும் சக்தி அதற்குண்டு என்பதை வரலாறு மீண்டும் மீண்டும் சாட்சி கூறுகிறது. அதனால், புத்தர் ஒரு காலத்தின் ஞானி மட்டுமல்ல — எல்லா காலங்களிலும் உயிர்ப்புடன் நிற்கும் ஒரு சிந்தனை. போர்க்களம் எங்கே இருந்தாலும், மனம் மாறும் இடம்தான் உண்மையான புத்தரின் உறைவிடம்.

அதனை மீள வலியுறுத்தும் நோக்கிலேயே தூமியின் முகப்பை அலங்கரிக்கிறார் புத்தர்.






கனிஸ்ரா ஜெயகாந்தன்

மனித வாழ்க்கையின் அடிப்படை அஸ்திவாரம் உழைப்பாகும். மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் உழைப்பின் அர்த்தத்தையும் அவசியத்தையும் உணர்ந்து கொண்டே இருக்கிறான். தனிமனித முன்னேற்றம் முதல் தேசிய வளர்ச்சி வரை அனைத்திற்கும் பின்னால் அமைதியாக செயல்படும் சக்தி தொழிலாளர்களின் உழைப்பே. இந்த உழைப்பை மதித்து, தொழிலாளர்களின் உரிமைகளை நினைவூட்டும் நாளாக ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 1 ஆம் தேதி தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகிறது.

தொழிலாளர் தினம் என்பது வெறும் ஒரு நாள் நிகழ்வு அல்ல் அது உலக வரலாற்றில் உரிமைக்காக எழுந்த குரலின் நினைவுச்சின்னமாகும். 19ஆம் நூற்றாண்டில் தொழிற்புரட்சிக்குப் பின்னர் தொழிற்சாலைகள் வேகமாக வளர்ந்தன. ஆனால் தொழிலாளர்களின் வாழ்க்கை மிகவும் துயரமானதாக இருந்தது. நீண்ட நேர வேலை, குறைந்த ஊதியம், பாதுகாப்பற்ற பணிச்சூழல், பெண்கள் மற்றும் குழந்தைகளின் சுரண்டல் போன்றவை அன்றாட நிலையாக இருந்தன.

1886 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிகாகோ நகரில் தொழிலாளர்கள் “எட்டு மணி வேலை, எட்டு மணி ஓய்வு, எட்டு மணி குடும்பத்திற்காக” என்ற கோரிக்கையுடன் போராட்டத்தில் இறங்கினர். இந்தப் போராட்டம் உலக தொழிலாளர் வரலாற்றில் மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. பலர் உயிரிழந்தாலும், தொழிலாளர் உரிமைகள் உலகம் முழுவதும் பேசப்படத் தொடங்கின. அதன் நினைவாகவே மே 1 உலக தொழிலாளர் தினமாக அங்கீகரிக்கப்பட்டது.

ஒரு நாட்டின் உண்மையான செல்வம் அதன் தங்கச் சுரங்கங்களோ, உயரமான கட்டிடங்களோ அல்ல் உழைக்கும் மக்களின் கரங்களே அதன் உண்மையான செல்வம். விவசாயி விதைக்கும் விதை, கட்டுமானத் தொழிலாளி எழுப்பும் கட்டிடம், தொழிற்சாலைத் தொழிலாளி உருவாக்கும் பொருள், ஆசிரியர் அளிக்கும் அறிவு, மருத்துவர் காப்பாற்றும் உயிர் இவை அனைத்தும் சமூக வளர்ச்சியின் அஸ்திவாரங்களாகும்.

சமூகத்தில் உடல் உழைப்புக்கும் அறிவு உழைப்புக்கும் சமமான மரியாதை வழங்கப்பட வேண்டும். ஆனால் பல சமயங்களில் உடல் உழைப்பை இகழும் மனப்பான்மை காணப்படுகிறது. இது மாற்றப்பட வேண்டிய ஒன்று. எந்த தொழிலும் இவ்வுலகில் இழிவானதல்ல் உழைப்பில்லாத வாழ்க்கையே உண்மையான இழிவு.

இன்றைய உலகில் தொழில்நுட்பம் வளர்ந்தாலும் தொழிலாளர்களின் பிரச்சினைகள் இன்னும் முற்றிலும் தீரவில்லை. குறைந்த சம்பளம், நிரந்தரமற்ற வேலை, மருத்துவ வசதியின்மை, ஓய்வூதிய பாதுகாப்பின்மை, பெண்தொழிலாளர்களின் பாதுகாப்பு, குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை , உரிய சட்டப்பாதுகாப்பின்மை, நிச்சயமற்ற வேலை போன்றவை தொடர்ந்து காணப்படுகின்றன. குறிப்பாக அமைப்புசாரா துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் இன்னும் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கொரோனா காலத்தில் அநேகமான தொழிலாளர்கள் வேலை இழப்பு, வருமானக் குறைவு, உணவுப் பாதுகாப்பின்மை ,மருத்துவ வசதியின்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டனர். தொழிலாளர் உரிமைகள் மனித உரிமைகளின் ஒரு பகுதியாகும். நியாயமான சம்பளம், பாதுகாப்பான பணிச்சூழல், ஓய்வு நேரம், மருத்துவ பாதுகாப்பு, விடுமுறை, தொழிற்சங்க உரிமை போன்றவை ஒவ்வொரு தொழிலாளருக்கும் கிடைக்க வேண்டிய அடிப்படை

உரிமைகள். தொழிலாளியின் வியர்வை உலருவதற்கு முன் அவருக்குரிய கூலியை வழங்க வேண்டும் என்ற உயர்ந்த நெறி நம் சமூகத்தின் ஒழுக்கமாக இருக்க வேண்டும்.


மாணவர்களும் இளைஞர்களும் தொழிலாளர் தினத்தின் உண்மைப் பொருளை புரிந்துகொள்ள வேண்டும். உழைப்பின் மதிப்பு, தொழிலின் கண்ணியம், பிறர் உழைப்பை மதிக்கும் மனப்பான்மை ஆகியவை சிறுவயதிலிருந்தே வளர்க்கப்பட வேண்டும். துப்புரவு பணியாளர் முதல் விஞ்ஞானி வரை அனைவரும் சமுதாயத்திற்கு அவசியமானவர்கள் என்பதை உணர வேண்டும். தொழிலாளர் தினம் நமக்கு ஒரு பெரிய பாடத்தை கற்பிக்கிறது: உழைப்பை மதிக்காத சமூகம் முன்னேற முடியாது. தொழிலாளர்களின் நலனைக் காக்கும் சமூகமே உண்மையான நாகரிக சமூகமாகும். தொழிலாளர்களின் வியர்வை தான் உலகின் செழிப்பை உருவாக்குகின்றது.

எனவே, தொழிலாளர் தினம் என்பது ஒரு விடுமுறை நாள் அல்ல் அது நன்றியுணர்வின் நாள், சமூக நீதியின் நாள், சமத்துவத்தின் நாள். நாம் அனைவரும் தொழிலாளர்களை மதித்து, அவர்களின் உரிமைகளை காக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் மட்டுமே சமத்துவமான நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும்.

உழைப்பை போற்றுவோம் தொழிலாளியை உயர்த்துவோம் சமத்துவமான சமூகத்தை உருவாக்குவோம் — இதுவே தொழிலாளர் தினத்தின் உண்மையான செய்தியாகும்.



# பக்தி பூர்வமாக நடைபெற்ற நல்லை குரு முதல்வர் குருபூசை தினம்



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் முதலாவது குருபூசை நிகழ்வு சித்திரை மாத திருவாதிரை நட்சத்திர நாளான புதன்கிழமை (22.04.2026) காலை-08.30 மணியளவில் நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றது.

நல்லை ஆதீனக் குருமூர்த்த ஆலயத்தில் சிறப்புப் பூஜை வழிபாடுகளுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. சிவபூமி அறக்கட்டளையினரால் நல்லை ஆதீன முன்றலில் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ள நல்லை ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானத்தின் திருவுருவச் சிலை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டு மலர்மாலைகள் அணிவித்து வணக்கம் செலுத்தப்பட்டது.



அதன் பின்னர் சொஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. ஈழத்தின் துறவிகள், அறிஞர்கள் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டு சுவாமிகளின் நினைவுகளை பகிர்ந்தனர்.







கம்ப வாரிதி ஜெயராஜ் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். சிவபூமி அறக்கட்டளை மற்றும் அகில இலங்கை இந்து மாமன்றம் ஆகியவற்றால் சுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு சிறப்பு மலர்களும் வெளியிடப்பட்டன.

பெருமளவு மக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வு மகேசுவர பூசையுடன் நிறைவு பெற்றது.









# தோல்வி வெற்றியின் முதல் படி

வடிவேல் ரவினா
3ம் வருட புவியியற் துறை மாணவி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மனித வாழ்க்கையில் ஒவ்வொருவரும் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் பலமுயற்சிகளை மேற்கொள்கிறார்கள். ஆனால் அந்த முயற்சிகள் அனைத்தும் உடனடியாக வெற்றியாக மாறுவதில்லை. சில நேரங்களில் நாம் எதிர்பாராத தோல்விகளையும் சந்திக்க நேரிடுகிறது. பலர் தோல்வியை வாழ்க்கையின் முடிவாகக் கருதினாலும், உண்மையில் அது வெற்றிக்கான ஆரம்பப் படியாகும். “தோல்வி வெற்றியின் முதல் படி” என்ற பழமொழி மனித வாழ்க்கையின் ஆழமான உண்மையை வெளிப்படுத்துகிறது. மனிதன் தனது முயற்சிகளில் தோல்வியை சந்திக்கும் போது அது அவரை மனஉறுதியுடன் மீண்டும் எழுந்து நிற்கத்தூண்டுகிறது. அந்த அனுபவம் அவரை மேலும் புத்திசாலியாகவும் திறமையானவராகவும் மாற்றுகிறது. எனவே தோல்வி என்பது ஒரு முடிவல்ல் அது ஒரு புதிய தொடக்கமாகும். ஒரு மனிதன் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாத நிலையே பொதுவாக தோல்வி எனக்கருதப்படுகிறது. ஆனால் வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தில் பார்த்தால், தோல்வி என்பது ஒரு கற்றல் அனுபவமாகும்.

அது மனிதனை தன்னுடைய குறைகளை உணரச் செய்து, அவற்றை சரி செய்து முன்னேற வழிகாட்டுகிறது. வாழ்க்கையில் எந்த ஒரு செயலும் முதல் முயற்சியிலேயே வெற்றி பெறுவது மிகவும் அரிது. பல முயற்சிகள், பல தடைகள், பல சோதனைகள் ஆகியவற்றின் மூலம் தான் ஒருவர் வெற்றியை அடைகிறார். அந்தப் பயணத்தில் தோல்வி ஒரு முக்கியமான ஆசிரியராக செயல்படுகிறது. அது மனிதனுக்கு பொறுமையையும் சிந்தனை திறனையும் வளர்க்கிறது. வாழ்க்கையில் தோல்வி இல்லாமல் வெற்றி கிடைப்பது அரிது. உண்மையில் தோல்வியை அனுபவித்தவர்களே வெற்றியின் மதிப்பை உணர முடியும். ஒருவர் வாழ்க்கையில் எந்த சிரமங்களையும் சந்திக்காமல் வெற்றி பெற்றால் அந்த வெற்றியின் மகத்துவத்தை அவர் முழுமையாக புரிந்துகொள்ள முடியாது. ஆனால் பல தடைகளை கடந்து வெற்றி பெறும் மனிதன் அந்த வெற்றியை மிகுந்த மகிழ்ச்சியுடன் அனுபவிக்கிறான். இதனால் தான் தோல்வி வெற்றிக்கான ஒரு அவசியமான கட்டமாக கருதப்படுகிறது. அது மனிதனை மனவலிமையுடன்வாழ கற்றுக்கொடுக்கிறது.

உலக வரலாற்றைப் பார்ப்போம் என்றால் பல பெரிய மனிதர்கள் தங்கள் வாழ்க்கையின் ஆரம்பத்தில் பல தோல்விகளை சந்தித்துள்ளனர். ஆனால் அவர்கள் அந்த தோல்விகளால் மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்ததால் உலக வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளனர். விஞ்ஞானிகள் ஒரு புதிய கண்டுபிடிப்பை செய்யும்போது பல முறை தோல்வியை சந்திக்கிறார்கள். ஒவ்வொரு தோல்வியும் அவர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை அளிக்கிறது. அந்த அனுபவங்களின் அடிப்படையில் அவர்கள் தங்களுடைய முறைகளை மாற்றி இறுதியில் வெற்றியை அடைகிறார்கள். இதனால் உலகத்திற்கு பல பயனுள்ள கண்டுபிடிப்புகள் கிடைக்கின்றன.

இதேபோல் விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் தொழிலதிபர்கள் பலரும் தங்கள் வாழ்க்கையில் பல தடைகள் மற்றும் தோல்விகளை எதிர்கொண்டுள்ளனர். ஆனால் அவர்கள் மன உறுதியுடன் தொடர்ந்து முயற்சி செய்ததால் இன்று உலகம் அவர்களை வெற்றியாளர்களாக மதிக்கிறது. தோல்வி மனிதனை பல வகைகளில் மேம்படுத்துகிறது. முதலில் அது மனிதனுக்குஅனுபவத்தை அளிக்கிறது. வாழ்க்கையில் புத்தகங்களில் கற்ற அறிவு முக்கியமானதாயினும் அனுபவத்தின் மூலம் கிடைக்கும் அறிவு மிகவும் ஆழமானது. தோல்வி மனிதனுக்கு வாழ்க்கையின் உண்மைகளை நேரடியாக

கற்றுக்கொடுக்கிறது. மேலும் அது மனிதனின் மன உறுதியை அதிகரிக்கிறது. ஒரு தோல்வியை எதிர்கொண்டு அதை கடந்து வந்த மனிதன் அடுத்த சவால்களை தைரியமாக எதிர்கொள்ள முடியும். அதேபோல் தோல்வி மனிதனின் சிந்தனை திறனையும் வளர்க்கிறது. ஒரு செயலில் தோல்வி ஏற்பட்டபின் அந்த செயலில் எங்கே தவறு ஏற்பட்டது என்பதை ஆராயும் பழக்கம் உருவாகிறது. இதனால் புதிய யோசனைகள் தோன்றுகின்றன. மேலும் தோல்வி மனிதனுக்கு பொறுமையை கற்றுக்கொடுக்கிறது. எந்த ஒரு பெரிய சாதனையும் உடனடியாக கிடைக்காது என்பதை அது உணர்த்துகிறது. தோல்வியை எதிர்கொள்ளும் போது மனிதன் சரியான மனப்பாங்கை கொண்டிருக்க வேண்டும். சிலர் தோல்வி ஏற்பட்டவுடன் மனம் தளர்ந்து முயற்சியை முற்றிலும் கைவிடுகின்றனர். ஆனால் வெற்றி பெறும் மனிதர்கள் அவ்வாறு செய்வதில்லை. அவர்கள் தோல்வியை ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு மீண்டும் முயற்சி செய்கிறார்கள். தோல்வியை சந்திக்கும் போது முதலில் மன அமைதியை காக்க வேண்டும். பின்னர் அந்த தோல்விக்கு காரணமான விடயங்களை ஆராய வேண்டும். எங்கு தவறு நடந்தது என்பதை புரிந்து கொண்டு அதை திருத்திக்கொள்ள வேண்டும். அதன்பின் புதிய உற்சாகத்துடன் மீண்டும் முயற்சி செய்ய வேண்டும். தொடர்ந்து முயற்சி செய்தால் வெற்றி நிச்சயமாக கிடைக்கும். மாணவர்களின் கல்வி வாழ்க்கையிலும் தோல்வி ஒரு முக்கியமான அனுபவமாகும்.

சில நேரங்களில் மாணவர்கள் ஒரு தேர்வில் எதிர்பார்த்த மதிப்பெண்களை பெற முடியாமல் போகலாம். ஆனால் அது அவர்களின் திறமையின்மையை காட்டுவதில்லை. மாறாக அது அவர்களுக்கு மேலும் முயற்சி செய்ய வேண்டியதை உணர்த்துகிறது. அந்த அனுபவத்தின் மூலம் மாணவர்கள் தங்கள் படிப்பு முறையை மாற்றிக்கொள்ளலாம். நேரத்தை சரியாக பயன்படுத்த கற்றுக்கொள்ளலாம். ஆசிரியர்களின் ஆலோசனைகளை கேட்டு தங்கள் அறிவை மேம்படுத்தலாம். இதன் மூலம் அடுத்த தேர்வுகளில் அவர்கள் சிறந்த முடிவுகளை பெற முடியும். எனவே கல்வி வாழ்க்கையில் தோல்வி என்பது பயப்பட வேண்டிய ஒன்று அல்ல அது முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் ஒரு அனுபவமாகும். தோல்வி தனிநபர் முன்னேற்றத்திற்கே அல்லாமல் சமூக முன்னேற்றத்திற்கும் முக்கியமான பங்காற்றுகிறது. ஒரு சமூகத்தின் வளர்ச்சி பல முயற்சிகளின் மூலம் நடைபெறுகிறது. ஒருநாடு புதிய திட்டங்களை செயல்படுத்தும்போது சில திட்டங்கள் வெற்றி பெறலாம், சில திட்டங்கள் தோல்வியடையலாம்.

ஆனால் அந்த தோல்விகள் மூலம் கிடைக்கும் அனுபவங்கள் எதிர்கால திட்டங்களை மேலும் சிறப்பாக வடிவமைக்க உதவுகின்றன. இதன் மூலம் சமூக முன்னேற்றம் தொடர்ந்து நடைபெறுகிறது. எனவே தோல்வி என்பது வளர்ச்சியின் ஒரு இயல்பான பகுதியே ஆகும். தோல்வியை வெற்றியாக மாற்ற சில முக்கியமான வழிமுறைகள் உள்ளன. முதலில் மனிதன் நம்பிக்கையை இழக்காமல் இருக்க வேண்டும். வாழ்க்கையில் எந்த சிரமமும் நிரந்தரமல்ல என்பதை உணர வேண்டும். இரண்டாவது, தோல்வியின் காரணங்களை ஆராய வேண்டும். அந்த காரணங்களை சரி செய்தால் அடுத்த முயற்சியில் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகரிக்கும்.

மூன்றாவது, தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். கடின உழைப்பும் உறுதியும் இருந்தால் எந்த தடையையும் கடந்து செல்ல முடியும். மேலும் மற்றவர்களின் அனுபவங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும். பலர் சந்தித்த சவால்கள் மற்றும் அவர்கள் அடைந்த வெற்றிகள் நமக்கு ஒரு ஊக்கமாக அமையும். முடிவாக பார்க்கும்போது, “தோல்வி வெற்றியின் முதல் படி” என்ற பழமொழி மனித வாழ்க்கையின் மிக முக்கியமான உண்மையை எடுத்துக்காட்டுகிறது. தோல்வி என்பது ஒரு முடிவு அல்ல் அது வெற்றிக்கான ஒரு ஆரம்ப கட்டமாகும். அது மனிதனை சிந்திக்க வைக்கிறது, அனுபவத்தை அளிக்கிறது, மன உறுதியை உருவாக்குகிறது. வாழ்க்கையில் வெற்றி பெற விரும்பும் ஒவ்வொருவரும் தோல்வியை அஞ்சாமல் எதிர்கொள்ள வேண்டும். தோல்வியை ஒரு ஆசிரியராக ஏற்று அதிலிருந்து பாடங்களை கற்றுக்கொள்வோம். அப்போதுதான் நமது வாழ்க்கையில் உண்மையான முன்னேற்றம் ஏற்படும். எனவே வாழ்க்கையின் பாதையில் தோல்விகள் வந்தாலும் மனம் தளராமல் தொடர்ந்து



முன்னேற வேண்டும். ஒவ்வொரு தோல்வியும் ஒரு புதிய அனுபவமாகவும் ஒரு புதிய வாய்ப்பாகவும் கருதப்பட வேண்டும். அப்போது தான் தோல்விகள் நம்மை தடுக்காமல் வெற்றியின் உச்சிக்கே கொண்டு செல்லும். மனிதன் உறுதியுடனும் நம்பிக்கையுடனும் முயற்சி செய்தால் எந்த தோல்வியும் நிரந்தரமாக இருக்காது. இறுதியில் வெற்றி நிச்சயமாக அவரை வந்தடைந்து விடும்.


அபயம்
இரகசியம் பேணும்
இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை
071 071 2345
மனநெருக்கீடுகளில்
இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி
வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை
துறை சார் மருத்துவர்களும் ,
குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி
தீர்வு காண்பதற்கு / வழிகாட்டுவதற்கு
தயாராக உள்ளனர் .
ஒரு நாளில் (24 மணி நேர இரவு பகல் சேவை)
எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக
தொடர்பு கொள்ளலாம்
மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை
காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை
பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.
தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் அனைத்தும்
இரகசியமாக பேணப்படும்
ABAYAM
அபயம்
அபயம் - கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு




நடராசா கோபிராம்
உளவியல்சிறப்புக்கலைமாணவன்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

உலகின் பல்வேறுபட்ட துறைகளை ஆய்வுக்கு உட்படுத்தியும் தாக்கத்தை ஏற்படுத்தியும் மனித சமுதாயத்திற்கு மிகவும் பயன்படும் ஒரு விஞ்ஞானமாக உளவியல் காணப்படுகின்றது. உளவியல் என்பது பொதுவாக மனித நடத்தையினை ஆய்வு செய்யும் ஒரு விஞ்ஞானமாக கருதப்படுகின்றது. இது நடத்தையை ஆராய்ந்து அறிவதுடன் உள்ளம் அல்லது மனதின் செயற்பாடு பற்றி விளக்குகின்றது. இந்த உளவியல் துறையானது பல்வேறுபட்ட கிளைகளை கொண்டதாக விளங்குகின்றது. சமுதாய உளவியல் & gt குழந்தை உளவியல் & gt கல்வி உளவியல் & gt ராணுவ உளவியல் & gt உயிரியல் உளவியல் & gt விருத்தி உளவியல் ரூபவ் ஆற்றுப்படுத்தல் உளவியல் &gt கடப்பு உளவியல் என பல்வேறு வகைபாடுகளை கொண்டு காணப்படுகின்றது அவற்றுள் &#39 கடப்பு நிலை உளவியல் & quot உளவியலில் முக்கியமானதாக காணப்படுகின்றது. கடப்பு நிலை உளவியலில் புலன்களை பயன்படுத்தாமல் புலக்காட்சி பெற்றுக்கொள்ளும் வகையில் அமைந்த புலன் கடந்த புலக் காட்சி எனும் ஒரு பிரிவு காணப்படுகின்றது.

பொதுவாக உளவியல் மனித மனம் பற்றிய அறிவுத்துறை என்று குறிப்பிடப்படுகின்றது ஆயினும் இந்த கடப்பு நிலை உளவியல் (Para Psychology) அப்பாற்பட்ட மனம் பற்றிய அறிவியலாக

விளங்குகின்றது. இதனை & #39அப்பாற்பட்ட உளவியல் " என்றும் &#39அதீத உளவியல் & quot' என்றும் அழைக்கின்றனர். மனம் மூலம் சாத்தியப்படும் செயல்களை மனிதனுக்கு புரியாத மர்ம வித்தைகளை & gt உள்ளடக்கிய மர்ம விடயமாக & gt' அறிவிக்க அப்பாற்பட்டதாகரூபவ் புரியாததாக இது உள்ளது. புலன் அங்கங்கள் மற்றும் தொழில்புலன் முதலியன உதவியின்றி செயல் புரியும் மற்றும் காரியங்களை நடாத்தும் மன இயக்கம் ஆகும். இதனையே கடப்பு உளவியல் என்று அழைக்கின்றனர்.

புறச் சூழலில் இருந்து தகவல்களை புலன் உறுப்பு மூலம் பெறுகின்றோம். ஒவ்வொரு புலன்களாலும் புலன் உணர்ச்சி உண்டாகிறது. புலன்களால் பெறப்பட்ட தகவல்களை மின் கணத்தாக்காக மாற்றப்பட்டு மூளையில் பெற்றுக்கொள்ளப்பட்டு அந்த தகவல் என்னவென்று அர்த்தம் கூறக்கூடிய செயல்பாடு புலக்காட்சி ஆகும். புலன் உணர்ச்சி எல்லோருக்கும் பொதுவானது ஆனால் அனுபவத்தின் அடிப்படையில் புலக்காட்சி ஆளுக்கு ஆள் வேறுபடும். ஏனெனில் ஒரு பொருளைப் பற்றி ரூபவ் நிகழ்ச்சி பற்றி பலரும் பல கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் பெற்றுக் கொள்ளலாம். புலன்கள் மூலம் ஒரு பொருளை அறியும் போது அந்த செய்தி நரம்புகள் மூலம் மூளைக்கு எடுத்துச் செல்லப்படும். ஐம்புலன்களில் இருந்து மூளைக்கு பதிவாகும் உணர்வைபுலன் உணர்ச்சி என்கிறோம்.

அச்செய்தி மூளையை அடைந்ததும் மூளை அதற்கு பொருள் கண்டுபிடிக்கிறது. இதனையே புலக்காட்சி என்கிறோம். எனவே ஐம்புலன்களால் ஒரு பொருளை உணர்தலே புலக் காட்சி எனப்படுகிறது. இந்த புலக்காச்சியிலிருந்து மாறுபட்ட ஒன்றாக புலன் கடந்த புலக் காட்சி அமைகின்றது. இது அசாதாரண மற்றும் அதீத சக்தி நிலையாக கொள்ளப்படுகின்றது. &#39 உளச்சத்தி ஆராய்ச்சிரூநரழவ் என்று அழைக்கப்படும்கடப்பு உளவியல் அசாதாரண விஞ்ஞான ஆற்றலையும் &gt அசாதாரண செயல்களையும் & gt இயல்பாக செய்ய முடியாதசெயல்களையும் ஆராயும் ஓர் துறையாகும். இந்த உளவியலாளர்கள் அசாதாரண செயற்பாடுகளை இரண்டு பிரிவாக பார்க்கின்றனர்.

1. Extra Sensory Perception (ESP)
2. Psychokinesis (உளந்தால் இயங்கியல்)

இந்த அசாதாரண நிலைகளில் ஒன்றான புலன் கடந்த புலக்காட்சி முக்கியமாக காணப்படுகிறது. புலன் கடந்த புலக்காட்சி என்பது புலன் உணர்விற்கு அப்பாற்பட்ட ஒன்று ஆகும். இது ஐம்புலன்களால் உணரப்படாத அப்பாற்பட்டது ஆகும். இதனை ESP என்றும் அழைப்பர். இதன் விரிவாக்கம் Extra sensory perception என குறிப்பிடப்படுகின்றது. சில இடங்களில் Extra sensory power என்றும் குறிப்பிடப்படுவது இங்கே அவதானிக்கத்தக்க விடயமாகும். ‘அறிவின் வாயில்கள்’ என்று அழைக்கப்படும் ஐம்புலன்களின் தொடர்பின்றி இது நிகழ்கின்றது.இதனால் இது ‘ஆறாவது உணர்வு’ என்றும் அழைக்கப்படுகின்றது. நாம் வழக்கமாக ஐம்புலன்களின் ஊடாகவே தரவுகளை பெற்று புலக்காட்சி பெறுகிறோம். அந்த வகையில் புலன்களை பயன்படுத்தாமல் சுற்றியுள்ள உலகு பற்றிய தகவல்களை பெறும் திறனாக புலன் கடந்த புலக்காட்சி உள்ளது.

புலன் கடந்த புலக் காட்சி பற்றி கற்பதை அதீத உளவியல் என்றும் அழைக்கிறோம். ஜோசப் பான்ஸ் ரைன் (Joseph Panks Rhine) என்பவர் Extra sensory perception என்ற சொல்லை முதன் முதலில் பிரபல்யப்படுத்தியதுடன் பல பரிசோதனைகளையும் அது தொடர்பாக நடத்தினார். அத்தோடு இவரதுஆய்வின் பிரதிபலனாக நேற Frontiers of the mind என்ற நூலை 1937 இல் வெளியிட்டதுடன் அந்நூலிலே Para Psychology என்ற வார்த்தையும் பயன்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஐம்புலன்களை பயன்படுத்தாமல் தங்களை சுற்றியுள்ள உலகு பற்றிய தகவல்களை பெறும் திறனாகவும் அறியப்பட்ட புலன் தரவுகளுக்கு அப்பாற்பட்ட விடயங்களை அனுபவிக்க முடியும் என்பதாகும்.

மனம் உடலைதாண்டி புலன்களின் எல்லையை அவை தாண்டி இயங்குமானால் Para Psychology நடவடிக்கைகள் விளைகின்றன. பௌதீக உலகை ஐந்து விதமாக அறிய முடியும். ஒலியாகரூபவ் ஒளியாக & gt மணமாகரூபவ் சுவையாக மற்றும் தொடுகையாக உலகை அறிய முடியும். ஆனால் புலன் கடந்த புலக்காட்சி அதுக்கு அப்பாற்பட்ட தன்மையாக காணப்படுகின்றது. ESP >id Second sight என்றும் அழைக்கின்றனர். புலன் கடந்த புலக்காட்சி பற்றி பல்வேறு சர்ச்சைகள் & gt ஆய்வுகள்ரூபவ் கருத்துக்கணிப்புகள் என்பன ஆராய்ச்சியாளர்களிடம் இன்று வரை இடம்பெற்று வருகின்றனர்.

ஏனெனில் 100% இதனை உண்மை என்றோ அல்லது பொய் என்றோ உறுதிப்படுத்தபடாமை ஆகும். புலன் கடந்த புலன் காட்சியை சிலர் எல்லோருக்கும் காணப்படும் ஒரு பொதுவான ஒன்றாக குறிப்பிடுகின்றனர்.சிலர் இதனை ஒரு சிலருக்கு மட்டும் உரித்தான தனி பண்பாக விளக்க முற்படுகின்றமையும் இங்கே சுட்டிக்காட்டத்தக்க ஒரு விடயமாகும். இவ்வாறான பல்வேறு கருத்துக்கள் காணப்பட்டபோதிலும் பொதுவாக எல்லோருக்கும் உணர்வுகள் ஏற்பட்டிருப்பதை அறியக்கூடியதாக உள்ளது நாம் ஒருவரை பற்றி நினைக்கும் போது அவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு அல்லது குறுஞ்செய்தி சில சமயம் வருவது சில சமயம் நேரிலும் வரும் சந்தர்ப்பம் உள்ளது. நாம் ஒருவரை தூரத்தில் பார்க்கும்போது

கண்முன்னே காட்சியளிப்பதுருபவ் ஒரு இடத்திற்கு செல்லும் போது முன்பே அங்கு வந்தது போன்ற அனுபவம் & gt காட்சி ஏற்படுதல் போன்ற பலவற்றைக் கூறலாம். இவற்றைப் புலன் கடந்த புலக்காட்சிகளாக கூற முடியும்.

புலன் கடந்த புலக்காட்சி பல்வேறு வகையாக விளங்குகின்றன அவற்றுள் பிரதானமாக

- தொலை உணர்வு(Telepathy)
- முன்னறிதல் (Precognition)
- பின்னோக்கி அறிதல் (Retro Cognition)
- மனக்கண் காட்சி (Clairvoyance)
- ஆவிகளுடன் பேசல் (Mediumship)
- பொருள் பற்றி அறிதல் (Psychometry)
- தெளிவுத்திறன் (Clairavdience)

போன்றவை முக்கியமானவையாக விளங்குகின்றன .

இவை தவிர Apporation (மறையச் செய்தல்) &gt Aura reading (மனிதனை சுற்றியுள்ள ஒலிஅலைகளை காணல்) &gt Automatic writing (பிற சக்தியின் உதவியுடன் எழுதுதல்)&gt Biolocation (ஒரே நேரத்தில் பல இடங்களில் இருத்தல்)&gt Extra Smelling (அதீதம் மணத்தினை அறியும் திறன்)&gt Extra sence of Testing (அதீத சுவையுணர்வு) &gt Extra sence of touching (அதீத தொடுகை உணர்வு) முதலிய பல்வேறுபட்ட புலன் கடந்த புலன்காட்சிகள் கடப்பாட்டு உளவியலில் காணப்படுகின்றன.

அவற்றுள் பிரதானமான முக்கியத்துவம் மிக்க ஒரு புலன் கடந்த புலன் காட்சி வகையாக &#39 தொலைவுணர்வு " என்பது காணப்படுகின்றது. ஒரு மனதில் இருந்து இன்னொரு மனதுடன் தொடர்பு கொள்வதை குறிக்கும். எமது மனதில் உள்ள எண்ணங்கள் சிந்தனைகள் எவ்வித தொடர்பான அமைப்புமின்றி மற்றவர்களுக்கும் மற்றவரின் எண்ணங்கள் சிந்தனைகள் தொடர்பான அமைப்பு இன்றி நாமும் புலக்காட்சி செய்யும் திறமையாகும் இது தனியே இருவருக்கிடையே மட்டுமல்லாமல் பேச்சு&gt உடல் மொழிரூபவ்எழுத்து பிற தனிப்பட்ட வழிகளை பயன்படுத்தாமல் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட மனங்களை நேரடி தொடர்பு கொள்ளும் திறனாகவும் விளக்கப்படுகிறது. F.W.H Myres என்பவர் ஒரு மனதில் இருந்து மற்றதிற்கு புலன்கள் உதவி இன்றி அனுப்புதல் எனவும் எண்ண பரிமாற்றம் எனக் குறிப்பிட்டது மற்றுமன்றி 1882 இல் ஒரு நபர் ஒன்றுக்கும் மேற்பட்ட நபருடன் தங்கள் மனதை பயன்படுத்தி தொடர்பாட முடியும் என்கிறார்.

கிரேக்க சொல்லிலிருந்து தோன்றிய இச்சொல் Tele-தூரம் என்றும் Pathieo- உணர்வு என்று பொருள்படுகிறது. டெலிபதி என்பது தூர உணர்வு என்றும் தொலை உணர்வு என்றும் குறிப்பிடப்படுகின்றது. இங்கு அறிவு கடத்தப்படும் அதாவது ஒருவர் தம் மனதில் இருக்கும் கருத்தை தான் நினைப்பதை அடுத்தவர் மனதிற்கு அனுப்புகிறார். அதை அவர் அப்படியே புரிந்து கொண்டால் அதை டெலிபதி எனலாம். இதில் இரண்டு மனம் சம்பந்தப்பட்டிருக்கும். அனுப்புபவர்ரூபவ் பெறுபவர் முதலான இருவரின் மனமும் சம்பந்தப்பட்டதாக இருக்கும்.

மனம் மூலம் செய்தி அனுப்புவதால் ‘மானசதந்தி’ எனவும் குறிப்பிடுகின்றன. இதில் இடம் தொடர்பாக அருகிலோ அல்லது தூரமோ என்ற கருத்து இல்லை. நேரம் எவ்வளவு என்பதும் தேவையில்லை ஒருவர் கருத்தை அனுப்பியதுமே அது யாருக்கு அனுப்பப்பட்டதோ அவர் உடனே புரிந்து கொண்டுவிடுகிறார். இது ஒரு மானசீக வேலையாக கருதப்படுகின்றது. Mind on the metter என்பது தெளிவாகின்றது. லாப்லொங்ரம்ப்பா எழுதிய ‘மூன்றாம் கண்’ என்ற நூலில் ஓரிடத்தில் சென்றால் புதுப்புது எண்ணங்கள் உண்டாக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். இது ஓர் டெலிபதி சார்ந்த சம்பவமாகவும் குறிப்பிடுகின்றார்.

பழங்காலத்தில் முனிவர்கள் யோகிகள் போன்றோர் தங்களுடைய குருவிடம் இருந்து இந்த சக்தி மூலமாக அறிவும் ஞானமும் பெற்றிருந்தமை நாம் புராணக் கதைகள் சமய நூல்கள் முதலானவற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

உளவியலாளரான Berthold Schwarz MD நெருங்கியவர்களுள் டெலிபதி சக்தி இருக்கும் என நம்பினார். இதனால் இவர் தனக்கும் தனது மனைவிக்கும் தனது இரு மகன்களுக்கும் ,இடையே உள்ள டெலிபதி அனுபவங்களை திகதியுடன் குறித்து வைத்தார். ,வர் எட்டு ஆண்டுகளில் கிட்டதட்ட 1500க்கு மேற்பட்ட தெளிவான டெலிபதி உணர்வுகள் ஏற்பட்டதாக குறிப்பிடுகின்றார். Mental communication என அழைக்கப்படும் இது Brain waves இனை வைத்து புரிதல் மூலம் இடம்பெறுகின்றது. இது எல்லா நேரமும் நடப்பதில்லை ஊடகம் ரூபவ் தகவல் தொடர்பு சாதனங்களில்அ ஆக்கிரமிக்கப்பட்ட இவ்வுலகத்தில் அதிசயிக்கும் தொடர்பாடல் வடிவமாக டெலிபதி மனித மூளை மற்றும் ஆன்மாவுடனான தொடர்பாடல் என்று வரையறுக்கப்படுகின்றது.

ஆழ்மன உதவியுடன் மனித மற்றும் பிற உயிரினங்களுடன் தொடர்பு கொள்ளும் முறையாக இது காணப்படுகின்றது. டெலிபதி நிகழ்வுகள் சாதாரணமான வாழ்வில் நிறைய நடக்கின்றன. இதில் மன எண்ணம் மற்றும் கருத்துகள் மிக நெருக்கமானவர்களிடம் பரிமாற்ற பயன்படுகிறது. தாய் ரூபவ் தந்தை &gt பிள்ளை & gt சகோதரர் & gt நெருங்கிய நண்பர்கள் & gt உறவு நிலையில் இப்போது இது நிறையவே பயன்படுத்தப்பட்டுள்ளது. வீட்டிற்குள் நாம் எங்கோ சென்று விட்டு நுழையும் போது &#39 அம்மா நான் இப்பதான் உன்னை பற்றி பேசிட்டு இருக்கிறேன்நினைச்சுட்டு இருந்தேன் வாராய் &quot எனக் கூறுவது நாம் ஒரு நெருங்கிய நண்பனையோ அல்லது நண்பியையோ நினைக்கும் போது அவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வருதல் &gt குறுஞ்செய்தி வருதல் மற்றும் ஒருவரை ஒருவர் பார்க்கும் போது அதே அவரும் அதே நேரத்தில் பார்த்தல் ரூபவ் பாட்டு பாடல்ரூபவ் முதலானவற்றின்போது நெருங்கிய நண்பர் ஒரே நேரத்தில் சொல்லல் மற்றும் விரிவுரைகளில் கேள்விகள் வினவப்படும் போது நண்பர்கள் கூற நினைக்கும் போது பதில் கூறல் முதலானவற்றை குறித்து காட்ட முடியும்.

இரட்டை சகோதரர்கள் மத்தியில் அதிக அளவு செயற்பாடுகளில் இருக்கும் நுண்ணறிவுகள் முதலானவற்றையும் குறிப்பிட முடியும். ஒரு சிலர் இக்கருத்து கொண்டே வெளிநாடுகளில் உள்ள தனி நபர் உறவுகள் பற்றியும் அவர் என்ன செய்கிறார்கள் என்பது பற்றியும் சரியாக கூறுவர். இவ்வாறு பல்வேறுபட்டு நிகழ்வுகள் சம்பவங்களில் டெலிபதியின் தாக்கம் இருப்பதை காணலாம். உள்மன உதவியுடன் டெலிபதி நிகழும். இந்த டெலிபதி தன்னை அறியாமலும் நடக்கும் நுணுக்கம் அறிந்துசெய்தி அனுப்புபவரும் உண்டு. வெவ்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் ஒருவர் பற்றி எண்ணுவோம் இது

தனிப்பட்டதாக காணப்படுகின்றது. குழுவாகியும் டெலிபதி செய்யலாம் என்று Society for psychological research கூறுகின்றது. தானாக நடக்கும் என்பதை விட நுணுக்கம் அறிந்து நடப்பதால் நன்மைகளும்ருபவ் தீமைகளும் ஏற்படுகின்றன.மாயத் தோற்றம் &gt வசப்படுதல் நோய்வழங்கல் &gt வலி முதலான தீயனவற்றையும் ஏற்படுத்துவதாக அமையாத வரையில் டெலிபதி சிறந்த ஒன்றாக கருதப்படும். இதன் அடிப்படையில் டெலிபதி தொடர்பான பல்வேறு ஆய்வுகள் மனிதரற்ற விலங்குகளிலும் மேற்கொள்ளப்பட்டன. எலியுடன் தொடர்பு கொள்வதற்கு டெலிபதி முறை பயன்படுத்தப்படுவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. பிரித்தானிய உளவியலாளரான Dr.Willbert moore &#39 தொலைவு சக்தி ஒரு விசேட சக்தி என்றும் அது சிந்தித்தலின் அடிப்படையில் செயல்படவில்லை அது உணர்வுபூர்வமாக செயல்படுகிறதுருநரழவ் எனக் கூறுகின்றார்.

டெலிபதி தனக்குத்தானே அல்லது தான் பிறருக்கு செய்யக் கூடியதாக காணப்படும். இது நாம் சாதாரணமான வழக்க செயல்களுக்கு மாறுபட்ட செயல்களை எப்படி பொறுப்பேற்கிறது என்பதையும் விளக்கப்படுத்துகின்றது. தொலைதூரம் செய்தி அனுப்பும் மற்றும் பெறும் முறை என்பதால் Myers என்பவர் வுநடநியவால எனக் கூற காரணமாக அமைந்தது. ஆங்கில ஹாலிவுட் திரைப்படங்களில் கூட அதிகமாக டெலிபதி சம்பவங்கள் பாத்திரங்களுடாக விளக்கப்படி இருப்பதை நாம் காணலாம்.

X-Men என்று அழைக்கப்படும் ஆங்கில ஹாலிவுட் திரைப்படத்தில் வரும் பேராசிரியர் மற்றும் பிறிதொரு பாத்திரம் டெலிபதி சக்தி கொண்டுள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது. படத்தில் பல பாத்திரங்கள் சக்தி உள்ளது போல காட்டி இருப்பினும் டெலிபதி இந்த இரண்டு பாத்திரங்களுக்கும் பிரதானமாக காணப்படுகின்றது. படத்தில் டெலிபதி உணர்வு மூலம் துணை நடிகர் எதிரிகளின் கப்பல் மாலுமியின் மனதை கட்டுப்படுத்தி தகவல் அனுப்பி வரவிருக்கும் தீய செயலை தடுப்பது போன்று காட்டப்பட்டிருக்கும். அதனை விட சில நல்லரூபவ் கெட்ட காரியங்களுக்காக உபநடிகன் டெலிபதியை பயன்படுத்தி இருப்பதும் இங்கே சுட்டிக்காட்டுத்தக்கதாகும்.

டெலிபதியினை முற்றாக நம்பாவிட்டாலும் கூட விஞ்ஞானத்தில் மிக முக்கிய ஒன்றாக எண்ணி பல ஆய்வுகள் நிகழ்ந்து வருகின்றன. Neurolink என்ற company மூளை நினைப்பதை உானி மூலம் சேமித்து கணினியில் பொருத்தி அதன் மூலம் கனவுகளையோ கடந்த காலங்களையோ பார்க்க முடிகின்றது என குறிப்பிட்டுள்ளதுடன் எதிர்கால நவீன உலகில் வேலைகளை இலகுவாக்கவும் கட்டுப்படுத்த முடியும் என கூறுகின்றது.

உதாரணமாக வீட்டுக்குள்ளே போகும்போது மின் குமிழை போட வேண்டும் &gt அணைக்க வேண்டும் என நினைப்பதையும் உடனே chip மூலம் தகவல் கடத்தப்பட்டு நிகழ்ச்சிகள் இடம் பெறும். இவற்றுக்கான ஆராய்ச்சி இன்று வரை இடம்பெற்ற வண்ணமே உள்ளது. இது டெலிபதியின் எதிர்கால நிலையை காட்டுவதாக உள்ளது.கனவுகள் முதலியன ஞாபகங்களை சேமித்து பார்க்க பயன்படும் எனக் கூறப்பட்ட இந்த எதிர்கால டெலிபதி தொழில்நுட்பம் கணினி உடனும் நவீன சாதனங்களுடன் இணைந்த படியினால் அதனை hack செய்வதன் மூலம் கல்வி மற்றும் அரசியல் மற்றும் மனித வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட பல பிரச்சனைகளுக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் இங்கே நாம் மறக்கக்கூடாது. ஆரம்பத்தில் டெலிபதியே இல்லை என விஞ்ஞானம் குறிப்பிட்ட போதிலும் தற்கால ஆய்வுகளில் ESP என்ற விஞ்ஞான ஆய்வுக்கு உட்பட்டதாக இது தொடர்பான பல ஆய்வுகளை நடத்தி வருவதாககுறிப்பிடப்படுகின்றது.

ஹாவாட் பல்கலைக்கழகத்திலும் இ,து தொடர்பான மூளை சார் ஆய்வுகள் ஆய்வாளர்களால் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கது ஆகும். இது &#39 மாயம் இல்லை மந்திரம் இல்லை &quot என டெலிபதி பற்றி ஆய்வு குறிப்புகளை வெளியிட்டவராக குளியோ & amp பினி காணப்படுகின்றார். இந்த மனத்தந்தி முறை சாதாரணமாகவும் அதாவது எனது நண்பர் ஒருவர் என்னைப் பற்றி அதிகமாக நினைக்கும் போதெல்லாம் நான் வெளியில் இருந்து அவரை வந்து பார்ப்பதாக அவர் குறிப்பிடுகிறார்.

(நூறு ஆயுளடா உனக்கு) என்று எமது பெற்றோர் மற்றும் நெருங்கிய நண்பர்கள் &#39 இப்பதான் நினைக்கிறேன் வந்துட்டா" எனகூறுவதும் ஒன்றாக காணப்படுகின்றது. சமீபத்தில் இந்தியாவில் இருக்கும் ஒரு நபருக்கும் பிரான்ஸ் நாட்டில் இருக்கும் ஒருவருக்கும் இடையில் புதிய தொழில்நுட்பம் மூலம் செய்தி அனுப்பி சோதனை செய்து பார்க்கப்பட்டது மூலம் ஒரு மனிதனின் மூளையிலிருந்து இன்னொரு மனிதனின் மூளைக்கு டெலிபதி அனுப்புவது இதுதான் முதல் தடவையாக கொள்ளப்படுகின்றது. எனவே புலன்கடந்த புலக்காட்சி வகைகளில் டெலிபதி முக்கியத்துவம் மிக்க ஒன்றாக கருதப்படுகிறது.





# ‘அவரோட குணம் அப்படித்தான்’ என்று சொல்லிவிடலாமா? – Narcissistic Personality Disorder பற்றிய உண்மை

யோகராஜா பவ்யா
உளவியல், மெய்யியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

“அவர் ரொம்ப self-centered… எல்லாமே அவரைப் பற்றிதான்!” “அவங்க எப்போவும் praise வேண்டுமாம்!” இப்படிப் பேசும் போது நாம் அதை ஒரு சாதாரண குணநலமாக எடுத்துக்கொள்கிறோம். ஆனால் சில நேரங்களில் அது சாதாரண குணநலமல்ல அது ஒரு ஆழமான உளவியல் கோளாறாக இருக்கலாம். அதுவே Narcissistic Personality Disorder. Narcissism என்றால் என்ன? “Narcissism” என்ற சொல் கிரேக்க புராணக் கதாபாத்திரமான Narcissus என்பவரிடமிருந்து வந்தது.

தன் பிரதிபலிப்பை பார்த்து தன்னையே காதலித்தவர் என்ற கதையிலிருந்து இந்த பெயர் உருவானது. ஆனால் நிஜ வாழ்க்கையில் Narcissistic Personality Disorder (NPD) என்பது வெறும் தன்னம்பிக்கை அல்ல. NPD உடைய நபர்களில் காணப்படும் சில அம்சங்கள்: தன்னையே மிக உயர்வாக நினைத்தல் எப்போதும் பாராட்டும் கவனமும் எதிர்பார்த்தல் பிறரின் உணர்வுகளை புரிந்துகொள்ள இயலாமை விமர்சனத்தை சகிக்க முடியாமை உறவுகளில் ஆதிக்கம் செலுத்தும் நடத்தை இவர்கள் வெளிப்படையாக மிகவும் நம்பிக்கையுடன் தோன்றினாலும் & gt

உள்ளார்ந்த நிலையில் மிக நுணுக்கமான தாழ்வு உணர்வை மறைத்துக் கொண்டிருக்கலாம்.

“அவரோட குணம் அப்படித்தான்” என்று சொல்லிவிடலாமா?

சாதாரண தன்னம்பிக்கை மற்றும் NPD இடையே வித்தியாசம் உள்ளது. தன்னம்பிக்கை கொண்ட நபர் மற்றவர்களையும் மதிப்பார். ஆனால் NPD உடையவர் உறவுகளை தன் தேவைக்கே பயன்படுத்தும் அபாயம் உண்டு. இது குடும்ப வாழ்க்கைருபவ் காதல் உறவு & gt வேலை சூழல் ஆகிய அனைத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும். பலர் இப்படிப்பட்ட நடத்தை “அவரோட Character அப்படித்தான்” என்று சமரசப்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் தொடர்ந்து மனஅழுத்தம் & gt தாழ்வு உணர்வு & gt துன்பம் ஏற்படுகிறதெனில் அது கவனிக்கப்பட வேண்டிய விஷயம். காரணங்கள்

NPD உருவாகுவதற்கு பல காரணிகள் உள்ளன:

சிறு வயதில் அதிகமாக புகழப்பட்ட அனுபவங்கள் அல்லது கடுமையான விமர்சன அனுபவங்கள் பெற்றோர் – குழந்தை உறவு சிக்கல்கள் மரபியல் மற்றும் மூளை வளர்ச்சி தொடர்பான காரணிகள் இதனை உளவியல் மற்றும் மனநலத் துறையில் வகைப்படுத்தி விளக்குவது American Psychiatric Association வெளியிட்ட Diagnostic and Statistical Manual of Mental Disorders ஆகும். சிகிச்சை இருக்கிறதா? ஆம்.



Personality Disorders க்கு உடனடி “மருந்து” இல்லை என்றாலும்ரூபவ் நீண்டகால உளவியல் சிகிச்சை மூலம் நடத்தை மாற்றம் சாத்தியமாகும். குறிப்பாக Cognitive Behavioral Therapy போன்ற முறைகள் உதவக்கூடும். முக்கியமாக & gt நபரே தன் பிரச்சினையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சமூகத்தில் நாம் செய்ய வேண்டியது என்ன?

Narcissism என்பதை “அதிக தன்னம்பிக்கை” என்று தவறாக புரிந்து கொள்ளாமல் இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களை குற்றம் சாட்டாமல் ரூபவ் புரிதலுடன் அணுக வேண்டும். மனநல ஆலோசனை பெறுவது பலவீனம் அல்ல என்பதை ஏற்க வேண்டும். முடிவாக & gt எல்லோரும் தங்களை நேசிப்பது இயல்பு.

ஆனால் தன்னை நேசிக்கும் போது மற்றவர்களை இகழ்ந்து & gt அவர்களின் உணர்வுகளை புறக்கணிக்கத் தொடங்கினால் & gt அது ஒரு எச்சரிக்கை மணி. “அவரோட குணம் அப்படித்தான்” என்று சொல்லிவிடாமல்ரூபவ் அதன் பின்னுள்ள உளவியல் உண்மையை புரிந்துகொள்வதே ஆரோக்கியமான சமூகத்தின் அடையாளம். இவ்வாறு மேலும் பல சுவாரஸ்யமான உளவியல் விடயங்கள் தொடர்பாக இப்பகுதியில் அறிந்து கொள்வோம்...





# பெண்களின் முன்னேற்றம்: சவால்களும் சாதனைகளும்

சிவகுமார் ஜதுஷிகா
உளவியற்த்துறை
(சிறப்புக்கற்கை)மாணவி
யாழ். பல்கலைக்கழகம்.

மனித சமூகம் வளர்ச்சியடைய முக்கிய பங்கு வகிப்பவர்கள் பெண்கள். ஒரு குடும்பத்தின் மட்டுமல்லாது, ஒரு சமூகத்தின் மற்றும் நாட்டின் முன்னேற்றத்திலும் பெண்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். கடந்த காலங்களில் பெண்கள் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கும் சமத்துவமின்மைக்கும் உட்பட்டிருந்தனர். கல்வி, பொருளாதாரம், அரசியல் போன்ற பல துறைகளில் பெண்களுக்கு வாய்ப்புகள் குறைவாக இருந்தன. எனினும், காலப்போக்கில் சமூக மாற்றங்கள், கல்வி பரவல் மற்றும் பெண்களின் விழிப்புணர்வு ஆகியவற்றின் காரணமாக பெண்கள் தங்களது நிலையை மாற்றிக் கொண்டு முன்னேற்றப் பாதையில் பயணிக்கத் தொடங்கினர். இதனால் பெண்களின் வாழ்க்கையில் பல சாதனைகள் உருவாகினாலும், அதே நேரத்தில் பல சவால்களும் தொடர்ந்தும் காணப்படுகின்றன. வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது, பல சமூகங்களில் பெண்கள் குடும்பப் பொறுப்புகளுக்குள் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர். பெண்களின் முக்கிய கடமையாக வீட்டுப் பணிகள், குழந்தைகள் பராமரிப்பு மற்றும் குடும்ப நிர்வாகம்

போன்றவை கருதப்பட்டன. இதனால் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளில் பெண்கள் பின்தங்கிய நிலையில் இருந்தனர். ஆனால் 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் கல்வி பரவலுடன் பெண்களின் நிலை மெல்ல மாறத் தொடங்கியது. பெண்கள் கல்வி பெறுவதன் மூலம் தங்களது திறமைகளை வெளிப்படுத்த ஆரம்பித்தனர். கல்வி பெண்களுக்கு தன்னம்பிக்கை, சுயநிலை மற்றும் சமூக விழிப்புணர்வை அளித்தது. இன்றைய உலகில் பெண்கள் பல துறைகளில் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். கல்வி துறையில் பெண்கள் பெரும் சாதனைகள் செய்து வருகின்றனர். பல்கலைக்கழகங்களில் பெண்கள் அதிக அளவில் கல்வி கற்றுக் கொண்டு பல்வேறு துறைகளில் திறமையான நிபுணர்களாக உருவாகி வருகின்றனர். மருத்துவம், பொறியியல், அறிவியல், சட்டம், கல்வி போன்ற துறைகளில் பெண்கள் முக்கியமான பங்களிப்பை வழங்குகின்றனர். இதனால் சமூகத்தில் பெண்களின் மதிப்பும் மரியாதையும் அதிகரித்து வருகிறது.

அதேபோல் பொருளாதார துறையிலும் பெண்களின் பங்கு அதிகரித்து வருகிறது. வேலைவாய்ப்புகளில் பெண்கள் அதிகமாக ஈடுபட்டு குடும்ப வருமானத்தில் பங்களிக்கின்றனர். தொழில்முனைவோர் ஆகவும் பெண்கள் முன்னேறி வருகின்றனர். சிறு மற்றும் நடுத்தர தொழில்களில் பெண்கள் ஈடுபடுவதன் மூலம் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதோடு சமூக வளர்ச்சிக்கும் பங்களித்து வருகின்றனர். பொருளாதார சுயநிலை பெற்ற பெண்கள் தங்கள் வாழ்க்கையில் முக்கியமான முடிவுகளை எடுக்கக் கூடிய நிலையை அடைகின்றனர். அரசியல் துறையிலும் பெண்களின் பங்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பல நாடுகளில் பெண்கள் அரசியல் தலைவர்களாகவும் நிர்வாகப் பொறுப்புகளில் இருப்பவர்களாகவும் செயல்படுகின்றனர். இது பெண்களின் திறமை மற்றும் தலைமையுத்திறனை வெளிப்படுத்துகிறது. அரசியல் மற்றும் சமூக நிர்வாகத்தில் பெண்கள் பங்கேற்பது சமூக நீதியும் சமத்துவமும் நிலைநிறுத்த உதவுகிறது. இவ்வாறு பல சாதனைகள் இருந்தாலும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் இன்னும் முழுமையாக மறைந்து விடவில்லை. சமூகத்தில் ஆணாதிக்க சிந்தனை பல இடங்களில் தொடர்ந்தும் காணப்படுகிறது. பெண்களின் திறமை மற்றும் உழைப்பை மதிக்காமல், அவர்களை இரண்டாம் நிலை மனிதர்களாகக் காணும் மனப்பான்மை சில சமூகங்களில் இன்னும் நிலவுகிறது. இது பெண்களின் முன்னேற்றத்திற்கு தடையாக அமைகிறது.

வேலைவாய்ப்பு துறையிலும் பெண்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். சில இடங்களில் பெண்களுக்கு சமமான சம்பளம் வழங்கப்படுவதில்லை. வேலை மற்றும் குடும்ப பொறுப்புகளை ஒரே நேரத்தில் சமநிலைப்படுத்துவது பெண்களுக்கு கடினமானதாக அமைகிறது. குறிப்பாக திருமணத்திற்குப் பின்னர் அல்லது குழந்தைகள் பிறந்த பிறகு பல பெண்கள் தங்கள் தொழில் முன்னேற்றத்தைத் தொடர முடியாத நிலையை சந்திக்கின்றனர். மேலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் சமூக அநீதிகளும் இன்னும் பல இடங்களில் காணப்படுகின்றன. குடும்ப வன்முறை, பாலியல் தொல்லை, சமூக கட்டுப்பாடுகள் போன்றவை பெண்களின் மனநலத்தையும் சமூக வாழ்க்கையையும் பாதிக்கின்றன. இத்தகைய பிரச்சினைகள் பெண்களின் முன்னேற்றத்தைத் தடை செய்கின்ற முக்கிய காரணிகளாக உள்ளன. இந்நிலையை மாற்றுவதற்கு கல்வி, சட்டம் மற்றும் சமூக விழிப்புணர்வு ஆகியவை மிக முக்கியமானதாகும். பெண்களுக்கு சமமான கல்வி வாய்ப்புகளை வழங்குவது அவர்களின் திறமையை வளர்க்க உதவும். அதேபோல் பெண்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டங்கள் வலுவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சமூகத்தில் பெண்களை மதிக்கும் மனப்பான்மையை உருவாக்குவதும் மிக அவசியமானதாகும். மேலும் குடும்பத்திலும் சமூகத்திலும் பெண்களுக்கு ஆதரவான சூழல் உருவாக்கப்பட வேண்டும். ஆண்களும் பெண்களும் சமமாகக் கருதப்படும் சமூக அமைப்பு உருவாகும்போது மட்டுமே உண்மையான சமத்துவம் ஏற்படும். பெண்களின் முன்னேற்றம் என்பது பெண்களின் தனிப்பட்ட முன்னேற்றமாக மட்டும் அல்லாமல், ஒரு சமூகத்தின் மற்றும் நாட்டின் வளர்ச்சியையும் குறிக்கிறது.





# இருபதாம் நூற்றாண்டில் கிரிக்கெட் கண்ட வளர்ச்சி

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் புல்வெளிகளில் ஒரு பொழுதுபோக்காகத் தொடங்கிய கிரிக்கெட், இருபதாம் நூற்றாண்டில் உலகளாவிய ஒரு உணர்ச்சிகரமான விளையாட்டாக உருவெடுத்தது. இந்த ஒரு நூற்றாண்டு காலம் கிரிக்கெட் வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டமாகும். தொழில்நுட்பம், அரசியல் மாற்றங்கள், புதிய விதிகள் மற்றும் வீரர்களின் அபாரத் திறமை என கிரிக்கெட் விளையாட்டை அடியோடு மாற்றியமைத்த பல நிகழ்வுகள் இந்தத் தருணத்தில்தான் அரங்கேறின.

1900-களின் தொடக்கத்தில் கிரிக்கெட் என்பது பெரும்பாலும் மேல்தட்டு மக்களின் விளையாட்டாகவும், இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளுக்கு இடையேயான கௌரவப் போராட்டமாகவும் மட்டுமே இருந்தது. ஆனால், நூற்றாண்டின் இறுதியில் அது கண்டங்களின் எல்லைகளைக் கடந்து, கோடிக்கணக்கான ரசிகர்களைக் கொண்ட ஒரு வணிகப் பேரரசாக மாறியது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலம் “கிரிக்கெட்டின் பொற்காலம்“ என்று அழைக்கப்படுகிறது. டபிள்யூ.ஜி. கிரேஸ் போன்ற ஜாம்பவான்கள் விளையாட்டிலிருந்து விடைபெறத் தொடங்கிய வேளையில், விக்டர் ட்ரம்பர் மற்றும் ரஞ்சித்சிங்ஜி போன்ற வீரர்கள் கிரிக்கெட்டிற்கு ஒரு புதிய அழகியலைக் கொண்டு வந்தனர். அந்த காலகட்டத்தில் டெஸ்ட் போட்டிகளே பிரதானமாக இருந்தன.

1909 ஆம் ஆண்டு இம்பீரியல் கிரிக்கெட் மாநாடு (ICC) நிறுவப்பட்டபோது, அது இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளை மட்டுமே உள்ளடக்கியிருந்தது. இது கிரிக்கெட்டின் ஆரம்பகாலக் கட்டமைப்பை உறுதிப்படுத்தியது. எனினும், முதல் உலகப் போர் வெடித்தபோது இந்த வளர்ச்சி தற்காலிகமாக முடங்கியது. போருக்குப் பிந்தைய காலம் கிரிக்கெட்டில் ஒரு பெரும் எழுச்சியைக் கொண்டு வந்தது. குறிப்பாக 1920 மற்றும் 30-களில் டான் பிராட்மேன் என்ற ஒரு வீரரின் வருகை கிரிக்கெட் புள்ளிவிவரங்களையே மாற்றி எழுதியது. சராசரியாக 99.94 ரன்களை வைத்திருப்பது இன்றும் ஒரு எட்ட முடியாத சாதனையாகவே உள்ளது.

இந்தக் காலகட்டத்தில் கிரிக்கெட் வெறும் விளையாட்டாக மட்டும் இருக்கவில்லை அது அரசியல் மற்றும் சமூகத்தின் கண்ணாடியாகவும் விளங்கியது. 1932-33 ஆம் ஆண்டுகளில் நடந்த “பாடிலைன்“ (Bodyline) தொடர் இதற்கு ஒரு சிறந்த உதாரணம். ஆஸ்திரேலியாவின் பிராட்மேனை வீழ்த்த இங்கிலாந்து அணி கையாண்ட அதிரடியான பந்துவீச்சு முறை, இரு நாடுகளுக்கும் இடையே ஒரு ராஜதந்திர ரீதியான பிளவையே ஏற்படுத்தும் நிலைக்குச் சென்றது. கிரிக்கெட்டில் வீரம், ஆக்ரோஷம் மற்றும் விதிகளுக்கு உட்பட்ட நேர்மை ஆகியவற்றுக்கு இடையேயான விவாதம் அப்போதுதான் தீவிரமடைந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, கிரிக்கெட்டின் வரைபடம் விரிவடைந்தது. மேற்கிந்தியத் தீவுகள், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் கிரிக்கெட் உலகின் முக்கிய சக்திகளாக உருவெடுத்தன. குறிப்பாக, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் எழுச்சி, காலனித்துவ ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு அடையாளமாகப் பார்க்கப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கிரிக்கெட் ஒரு புதிய சகாப்தத்தை நோக்கி நகர்ந்தது. 1960-களில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு நாள் போட்டிகள் (ODI) கிரிக்கெட்டின் போக்கையே மாற்றின. ஐந்து நாட்கள் நடக்கும் டெஸ்ட் போட்டிகளுக்கு மத்தியில், சில மணிநேரங்களில் முடிவை வழங்கும் இந்த முறை ரசிகர்களிடையே



பெரும் வரவேற்பைப் பெற்றது. 1975 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற முதல் உலகக் கோப்பைத் தொடர், கிரிக்கெட்டை ஒரு உலகளாவிய திருவிழாவாக மாற்றியது. மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இரண்டு உலகக் கோப்பைகளை வென்று உலக கிரிக்கெட்டைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. கருப்பு மின்னல் என்று அழைக்கப்பட்ட வேகப்பந்து வீச்சாளர்கள் மற்றும் விவியன் ரிச்சர்ட்ஸ் போன்ற அதிரடி பேட்ஸ்மேன்கள் கிரிக்கெட்டை ஒரு போர்க்களமாக மாற்றிக் காட்டினர்.

1970-களின் இறுதியில் கெர்ரி பேக்கர் என்ற ஆஸ்திரேலிய தொழிலதிபர் கொண்டு வந்த "வேர்ல்ட் சீரிஸ் கிரிக்கெட்" (World Series Cricket) ஒரு மிகப்பெரிய புரட்சியாக அமைந்தது. அதுவரை வெள்ளை உடை அணிந்து விளையாடப்பட்ட கிரிக்கெட்டில் வண்ண உடைகள், மின்னொளியில் இரவு நேரப் போட்டிகள் மற்றும் வெள்ளை நிறப் பந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இது பாரம்பரியவாதிகளால் விமர்சிக்கப்பட்டாலும், கிரிக்கெட்டை ஒரு லாபகரமான வணிகத் துறையாக மாற்றுவதற்கு இதுவே அடித்தளமிட்டது. வீரர்களுக்கான ஊதியம் அதிகரித்ததுடன், தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமைகள் கிரிக்கெட் வாரியங்களுக்குப் பெரும் வருமானத்தை ஈட்டித் தரத் தொடங்கின.

1980-களின் தொடக்கத்தில் இந்திய அணியின் உலகக் கோப்பை வெற்றி (1983), ஆசியக் கண்டத்தில் கிரிக்கெட்டின் வளர்ச்சியை அசுர வேகத்தில் மாற்றியது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் கிரிக்கெட் ஒரு மதமாகவே பார்க்கப்படத் தொடங்கியது. 1987 ஆம் ஆண்டு உலகக் கோப்பை முதன்முறையாக இங்கிலாந்திற்கு வெளியே இந்தியாவில் நடத்தப்பட்டது, கிரிக்கெட் அதிகாரத்தின் மையம் லண்டனிலிருந்து ஆசியாவிற்கு நகரத் தொடங்கியதைக் குறித்தது. இதே காலகட்டத்தில் தென்னாப்பிரிக்காவின் இனவெறி கொள்கையினால் அந்த அணிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை, கிரிக்கெட் வரலாற்றில் ஒரு கறுப்புப் பக்கமாக இருந்தாலும், 1990-களின் தொடக்கத்தில் நெல்சன் மண்டேலாவின் விடுதலையைத் தொடர்ந்து அந்த அணி மீண்டும் சர்வதேச கிரிக்கெட்டிற்குத் திரும்பியது ஒரு நெகிழ்ச்சியான தருணமாகும்.

தொழில்நுட்ப வளர்ச்சியும் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் கிரிக்கெட்டில் முக்கியப் பங்கு வகித்தது. மூன்றாவது நடுவர் (Third Umpire) முறை, ரீப்ளே வசதிகள் மற்றும் பந்து செல்லும் பாதையைக் கணிக்கும் கருவிகள் போன்றவை நடுவர்களின்

முடிவுகளில் இருந்த பிழைகளைக் குறைக்க உதவின. நூற்றாண்டின் இறுதியில் ஷேன் வார்னே மற்றும் முத்தையா முரளிதரன் போன்ற சுழற்பந்து வீச்சாளர்கள் கிரிக்கெட்டின் மாயாஜாலங்களை உலகிற்கு மீண்டும் அறிமுகப்படுத்தினர்.

வார்னே வீசிய “நூற்றாண்டின் பந்து“ (Ball of the Century) இன்றும் ரசிகர்களால் வியப்புடன் பார்க்கப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் கிரிக்கெட் என்பது வெறும் ரன்களும் விக்கெட்டுகளும் மட்டுமல்ல் அது மனித நாகரிகத்தின் வளர்ச்சி, அரசியல் விடுதலை மற்றும் உலகமயமாக்கலின் ஒரு பகுதியாகும். நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு சில நாடுகளில் மட்டுமே விளையாடப்பட்ட ஒரு விளையாட்டு, 1999 ஆம் ஆண்டு முடிவடையும் போது ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் அமெரிக்கக் கண்டங்களில் பரவி ஒரு மாபெரும் கலாச்சாரமாக மாறியிருந்தது. டெஸ்ட் கிரிக்கெட்டின் கண்ணியத்தையும், ஒருநாள் போட்டிகளின் வேகத்தையும் இணைத்துப் பார்த்த இந்த நூற்றாண்டு, கிரிக்கெட் விளையாட்டின் அடித்தளத்தை மிகவும் பலமாக அமைத்துக் கொடுத்தது. இந்த ஒரு நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்களே இன்று நாம் காணும் நவீன கிரிக்கெட்டின் பிரம்மாண்டத்திற்கு வித்திட்டன என்பதில் ஐயமில்லை. இருபதாம் நூற்றாண்டு கிரிக்கெட்டிற்கு ஒரு அடையாளத்தையும், வாழ்வாதாரத்தையும், முடிவில்லாத புகழையும் தேடித்தந்தது. இவ்வாறு ஒரு காலத்தின் சாட்சியாக, இருபதாம் நூற்றாண்டின் கிரிக்கெட் வரலாறு என்றும் அழியாத சுவடுகளாக நிலைத்திருக்கிறது.

